# ரூ. 6 லட்சம் பொருட்கள் கைப்பற்றப்பட்டன

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 10
இதழ் 38
தேசிய தினசரி

[illegible] பங்குனி 6 ஜுல்ஹஜ் 19 செவ்வாய்க்கிழமை (19-3-68)

## காங்கேசன்துறையில் பொலிஸ் வேட்டை

யாழ்ப்பாணம், செவ். சுமார் 6 லட்சம் ரூபா பெறுமதியான கள்ளக்கடத்தல் பொருட்களை வட பகுதி பொலிசார் நேற்றுக் கைப்பற்றியதாக தகவல் கிடைத்துள்ளது. காங்கேசன்துறைப் பகுதியில் இச்சம்பவம் நேற்று அதிகாலை நடைபெற்றது.

பொலிசாருக்குக்கிடைத்த இரகசிய தகவல் ஒன்றைத் தொடர்ந்து பொலிசார் நடத்திய வேட்டையில் முதலில் லொறி ஒன்றிலிருந்து 19 மூடைகள் கைப்பற்றப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்துகடலில் இருந்து 7 மூடைகள் கைப்பற்றப்பட்டதாகத்தெரிகிறது. இவற்றில் விலையுயர்ந்த கூறைச் சேலைகள், மின்சார விசிறிகள் உட்பட இன்னும் பல விலையுயர்ந்த பல பொருட்கள் இருந்தனவாம்.

நடுக்கடலில் இன்னும் ஒரு படகு விலையுயர்ந்த கள்ளக்கடத்தல் பொருட்களுடன் நிற்பதாகக் கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து பொலிஸ் அதிவேக இயந்திரப்படகான 'ஜோன் அட்டிலை' அங்கு அனுப்பி வைக்கப்

(5-ம் பக்கம் பார்க்க)

# கேரதீவு-சங்குப்பிட்டி பாலம் அமைப்பு தடைப்படும்?

## காங்கேசன்துறை பட்டின சபையின் அந்தஸ்து உயராது

### மகாநாட்டின் பின்னர் மந்திரி செய்த முடிவு

காங்கேசன்துறை, திங்கள் உள்ளூராட்சி அமைச்சினால் கூட்டப்பட்ட மகாநாட்டை தொடர்ந்து காங்கேசன் துறைபட்டின சபையை நகரசபை அந்தஸ்திற்கு உயர்த்துவதை அமைச்சர்பின் போட்டுள்ளார்.

மகாநாட்டில் காங்கேசன்துறைஎம்.பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு. ஆ. வ. சதாசிவம் மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. எஸ். அருணாசலம் தெல்லிப்பளை கிராமசபைத் தலைவர் திரு. எஸ். சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கீரிமலைக்கேணியை காங்கேசன்துறைபட்டினசபையுடன் சேர்ப்பதை தெல்லிப்பளை கிராமசபை தலைவர் ஆட்சேபித்ததாகவும் மயிலியிட்டி கிராமசபையை இரு சபைகளாக பிரிக்கும்படி மயிலிட்டி கிராமசபை தலை

(5-ம் பக்கம் பார்க்க)

## உப்புஉற்பத்திபாதிக்கப்படுமென நிபுணர்எச்சரிக்கையின்எதிரொலி

யாழ்ப்பாணம், செவ். பூநகரி பாதையில் கேரைதிவுக்கும் சங்குப்பிட்டிக்குமிடையில்அமைக்க உத்தேசமிடப்பட்ட பாலம் அமைப்பதில் சில பிரச்னைகள் எதிர்நோக்கியுள்ளதால் இத்திட்டம் கைவிடப்படலாமெனத் தெரியவந்துள்ளது. இது பற்றிய பூரணவிபரங்களும் பொதுவேலைப்பகுதி அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பாதையில் நடைபெற்றுவரும் படகு சேவை சீர்கேடாக இருப்பதாகவும் இப்பகுதி மக்களின் போக்குவரத்து வசதியும்கருதியே சுமார் 300 அடி நீளமான இப்பாலம்அமைக்க உத்தேசமிடப்பட்டது யாழ். மாவட்ட இணைப்புக்குழு தீர்மானித்ததற்கிணங்க இப்பாலம் கட்டுவதற்கான அத்திபாரக்கல்லையும்

(5-ம் பக்கம் பார்க்க)

## நான்காவது நாளாக வேலைநிறுத்தம்தொடர்கிறது

### நோயாளர் கஷ்டம்

யாழ்ப்பாணம், செவ். இலங்கை பூராவும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அரசினர் ஆஸ்பத்திரி வைத்திய ஆய்வுகூட ஊழியர்களின் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் நான்கு நாட்களாகியும் இது முடிவடையக்கூடிய சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லையெனத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய 14 ஆய்வுகூட ஊழியர்களில் 13 பேர் வேலைநிறுத்தம் செய்துவருகிறார்கள். ஒருவர் வைத்திய லீவில் சென்றுள்ளார். இரு டாக்டர்களும், இரு ஊழியர்களும் மாத்திரம் வேலை செய்துவருகிறார்கள்.

வெளி நோயாளர்களின் இரத்தம் பரிசோதனைசெய்தல் போன்ற வேலைகள் முற்றாக ஸ்தம்பித்துள்ளன. அவசர தேவைகள் மட்டும் டாக்டர்களால் கவனிக்கப்பட்டுவருகின்றது.

ஊர்காவற்றுறை, மந்திகை, காங்கேசன்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய ஆஸ்பத்திரிகளைச் சேர்ந்த ஆய்வுகூட ஊழியர் நான்கு நாட்களாக வேலைநிறுத்தம் செய்துவருவதாக சுகாதார அத்தியட்சகர் அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. [கா. நி.]

## காருக்கு பெற்றோல் ஊற்றுகையில் எரிந்துமரணம்

யாழ்ப்பாணம், செவ்வாய் காருக்குப் பெற்றோல் விடும்போது நெருப்புப் பற்றியதால் 40 வயது நபர் ஒருவர் எரிந்து மரணமானார். இவ் பரிதாப சம்பவம் மட்டுவில் வடக்கில் நடைபெற்றது.

மரணமான சிவகுருவின் மரணம் சம்பந்தமாக யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் மரண விசாரணை நடாத்தப்பட்டது. மரணமானவர் காருக்கு பெற்றோல் விடும் போதுநெருப்புப் பற்றியதால் நெருப்புக் காயங்கள் உண்டானதாகவும் முற்றாக உடல் எரிந்த நிலையில் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் மரண விசாரணை நடாத்தினார். சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. பெர்ணண்டோ சாட்சிகளை ஆஜர் செய்தார். [கா. நி.]

### ரொடீஷியாவில்

## ஸ்மித்துக்கு எதிராக கொரில்லாபோர்

லண்டன், மார்ச் 18 ரொடீஷியாவில் ஐயன் ஸ்மித்தின் சட்டவிரோத ஆட்சிக்கு எதிராக ஆபிரிக்க தேசியவாதிகள் 'கொரில்லா' தாக்குதல் ஒன்றை ஆரம்பித்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

[எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 3-ந் திகதி நடைபெறவிருக்கும் மாணவ ஆசிரியர் பரீட்சைக்கான 'பொது அறிவும் உள்ளூர் அறிவும்' மாதிரி வினா விடைகளை 6-ம், 7-ம் பக்கத்தில் பார்க்க]

### கச்சதீவு பெருநாள்

## கண்காணிப்பு வேலைகளுக்கு விமானங்கள் வருகின்றன

யாழ்ப்பாணம், செவ். இம்மாதம் 21-ம் திகதி ஆரம்பமாகும் கச்சதீவு பெருநாளை முன்னிட்டுவழக்கம்போல இவ்வருடம் கச்சதீவில் கடைகள் அமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. இங்கிருந்து 4நாட்களுக்குத் தேவையான பொருட்களைமட்டும் யாத்திரீகர்கள் கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்டிருப்பதே இதற்குக்காரணமாகும்.

இந்த அறிவித்தலை பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர். கள்ளக்கடத்தல் சட்டவிரோதக் குடியேற்றம் ஆகியனவற்றை முற்றாகத் தடுக்கவே இந்நடவடிக்கைகள் முன்னேற்பாடாக எடுக்கப்பட்டுள்ளன.

இதுதவிர நெடுந்திவுப்பகு[illegible] சுமார் 300 இராணுவத்தினர் அங்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டனர். இங்கு ரோந்து சுற்றவென 3 இராணுவ 'ஜீப்' வண்டிகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நாளைமுதல் வடபகுதியின் கரையோரங்களில் அமைக்கப்படும் 8 பரிசோதனை நிலையங்களிலும் முப்படை வீரர்களும் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள், இன்று

[8-ம் பக்கம் பார்க்க]

## இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

மயிலிட்டிக் கிராமத்துக்கருகே கல்லுக்கிண்டி எடுக்கக்கூடிய [Hard Lime-Stone Quarry] அரை ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி ஒன்று வாடகைக்கோ, குத்தகைக்கோ, விலைக்கு வாங்குவதற்கோ தேவை.

மனேஜர், துறைமுக அபிவிருத்திப் பகுதியும், சிவில் என்ஜினியரிங் பகுதியும்.

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்
காலிமுகம், கொழும்பு-3.

495

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# துப்பாக்கியுடன் வெறி கொண்டலைந்த மனிதன்

## 6 பேரைக் கொன்றான்

வாஷிங்டன், மார்ச் 18 அமெரிக்காவில், ஒரு மனிதன் வெறிபிடித்த மிருகமாக மாறி 6 பேரைச் சுட்டுக்கொன்றுள்ளான். இவன் சூட்டில், மற்றும் மூவர் காயமுற்றனர்.

ஒரு துப்பாக்கியுடன் அலைந்துதிரிந்த இம்மனிதன் தனிப்பட்ட வீதிகளில் புகுந்து 5 பேரைக் கொலை செய்துவிட்டுப் பின்னர் அண்மையிலிருந்த மதுபானக் கடையொன்றினுள் சென்று, அங்கு மது அருந்திக்கொண்டிருந்தவர்களில் ஒருவரைச் சுட்டுக்கொன்றான்.

கடைசியில், பலத்த போராட்டத்துக்குப் பின், பொலிசார் அவனை மடக்கிப் பிடித்தனர்.


## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கையிருப்புசரிபார்த்தல்

வருடாந்த கையிருப்புகள் சரிபார்ப்பதற்காக ஜம்பெட்டாவிலும் மற்றும் பேலிய கொடையிலும் உள்ள பண்டகசாலைகள் 1968ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் திகதி தொடக்கம் 31ந் திகதிவரை மூடப்பட்டிருக்கும்.

பொதுமுகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்,
135, யூனியன் பிலேஸ்,
கொழும்பு-2.
1968 மார்ச் 19. 491



# S. R. S:

## ஜவுளி மாளிகையில்

லங்கா சலுசல லிமிட்டெட்

ஜவுளிகள் கூப்பனுடன் கீழ்க்காணும் விலைவில் பெறலாம்.

| | |
|---|---|
| ஜம்பிங் பிஷ் சித்தை | — 1-75 |
| "கக்ரஸ்" கொங்கோங் சித்தை | — 1-95 |
| சைஞ வெள்ளை பப்ளின் | — 2-00 |
| சைஞ கலர் பப்ளின் | — 2-00 |
| செக்கஸ்லேவியா கலர் பப்ளின் | — 2-05 |

எஸ். ஆர். செல்லத்துரை

216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 296



இப்பொழுது திரையிடப்படுகிறது!

| | | |
|---|---|---|
| இங்ஸ்லி [கொழும்பு] | பிளாஸா [வெள்ளவத்தை] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்] |
| விஜயா [மட்டுநகர்] | ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] | விஜிதா [ஹட்டன்] |



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே. ஆர். விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்

# சரஸ்வதி சபதம்

(ஈஸ்ட்மென் கலர்)


## காணவில்லை



R. ராமச்சந்திரன்

இப்படத்திலுள்ளவர் நாவலப்பிட்டி கல்கந்தைதோட்டத்தைச் சேர்ந்த ராஜமாணிக்கம்பிள்ளை மகன் ராமச்சந்திரன் உயரம் 5 அடி. கருப்புநிற லோங்ஸ் அணிந்திருப்பவர். 2 மாதங்களாக காணவில்லை. இவரைப் பற்றி கீழ்க்கண்ட விலாசத்திற்கு தகவல் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

S. சுப்பையா,
15/6, உம்பிச்சி பிளேஸ்,
ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு.

ப. க. பரமநாதன்,
No. 236, K. K. S. Road,
யாழ்ப்பாணம், 494

## கேள்விவிளம்பரம்

நாவலடி ரோட்டுவேலைக்கும், பிரசாத்ரோட்டுவேலைக்கும் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ந் திகதி காலை 10-30மணிவரை சீல்வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 23-3-68 நண்பகல் 12 மணிவரை ரூபா 25/- கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்களை சபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

சி. மார்க்கண்டு,
தலைவர்,
மானிப்பாய் கிராமசபை.
மானிப்பாய்கிராமசபை
அலுவலகம்,
ஆனைக்கோட்டை,
12-3-68. 496


86வது தினம்!

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30
போலைதினங்களில் 4காட்சி
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த

காவல்காரன்



MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45p.m.
Frnest Borgnine
Goe Flynn
in
McHALES NAVY



2-வது மாதம்

நியூ காலிங்கன் (இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30
எஸ். எஸ். ஆர். - தேவிகா நடித்த

மறக்க முடியுமா?



REGAL JAFFNA
Daily at
4-40, -700, & 9-45 p.m
Guystock Well, Telly Savalas,
in
BEAU GESTE
(Audits - in Technicolor)


வடமராட்சியில்

## காசரோகிகளுக்கு இலவச உடை

புலோலி, திங்கள்

தமிழ்புத்தாண்டை முன்னிட்டு க்ஷயரோக தடுப்பு சங்கம், 2000 ரூபா பெறுமதியான உடுப்புகளை மந்திகை அரசினர் வைத்தியசாலை மற்றும் கரவெட்டி, அம்பன், வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளில் காசரோகத்தினால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெறுபவர்களுக்கு இலவசமாக வழங்க இருப்பதாகத் தெரிகிறது.

## மனமுடைந்த வாலிபர் தற்கொலை

யாழ்ப்பாணம், செவ்.

தந்தையுடன் வாக்குவாதம் செய்த பின்னர் மனமுடைந்த வாலியன் ஒருவன் இறுதியில்தற்கொலை செய்து தனது உயிரை மாய்த்துக் கொண்டார். இச்சம்பவம் காங்கேசன்துறைப் பகுதியில் நடைபெற்றது.

காங்கேசன்துறை தையிட்டியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் சீனிவாசகம் என்பவரின் மகனான சந்திரகாந்தன் என்பவரே மரணமானவராவர். தனது தொழில் விஷயமாகத் தந்தையுடன் வாக்கு வாதம் செய்த பின்னரே இவர் தற்கொலைசெய்ததாக மரண விசாரணையில் தெரிய வந்தது.

மரண விசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம் மரண விசாரணை நடத்தினார். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (கா. நி)

தீவுப்பகுதி

## உடற் பயிற்சி போட்டி முடிவு

ஊர்காவற்றுறை, திங்கள்

தீவுப்பகுதி வட்டார உடற்பயிற்சி போட்டி நேற்றுக் காலை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. பல பாடசாலை மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். உடற் பயிற்சி பரிசோதகர் திரு. சிவரத்தினம் போட்டியை முன்னின்று நடாத்தினார். வட்டார வித்தியாதரிசிதிரு. நல்லையாவும் சமூகம் கொடுத்திருந்தார்.

போட்டிமுடிவு வருமாறு:-

13வயதுக் குட்பட்ட 'ஆ' பிரிவு ஆண்கள் புங்குடுதீவு றோ.க. பாடசாலை 16 வயதுக்குட்பட்ட 'ஆ'பிரிவு ஆண்கள் புங்குடுதீவு றோ.க. பாடசாலை.

13 வயதுக்குட்பட்ட பெண்கள் 'ஆ' பிரிவு 1 வது இடம் சென்ற் மேரிஸ் பெண் பாடசாலை ஊர்காவற்றுறை 2 வது இடம் புங்குடுதீவு றோ.க.பாடசாலை. 16 வயதுக்குட்பட்ட பெண்கள் 'ஆ' பிரிவு 1 வது இடம் சென்ற் மேரிஸ் பெண் பாடசாலை ஊர்காவற்றுறை, 2 வது இடம் புங்குடுதீவு றோ.க.பாடசாலை.

19 வயதுக்குட்பட்ட 'அ' பிரிவு பெண்கள் விற்றின் புளவர் பெண் பாடசாலை கரம்பன். 16 வயதுக்குட்பட்ட பெண்கள் 'அ' பிரிவு விற்றின் புளவர் பெண் பாடசாலை கரம்பன், 13 வயதுக்குட்பட்ட பெண்கள் 'அ' பிரிவு 1 வது இடம் விற்றின் புளவர் பெண் பாடசாலை கரம்பன், 2 வது இடம் வேலணை மத்திய மகாவித்தியாலயம், 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் 'அ' பிரிவு மண்டைதீவு மகாவித்தியாலயம் இவர்கள் இம் மாதம் 23, 24 ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் வட பகுதிப் போட்டியில் கலந்து கொள்வார்கள்.

## வரி விளம்பரம்

### கல்வி

இசைவகுப்பு:

எக்கோடியன்—கிட்டார், மிருதங்கம், மெண்டோலின் முதலிய வாத்தியபயிற்சி அளிக்கப்பெறும். நாதன் மியூஸிக்கல் ஸ்ரோர்ஸ், 23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1602

வகுப்புகள்

தபால் மூலம் கணக்கியல் (Accounts) கற்பிக்கப்படும். முதலாம் பாடத்திற்கும் விபரங்களுக்கும் ஒரு ரூபா அனுப்பவும். நந்தினி வித்தியாலயா, 280, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். 1613

### தேவை

நெசவாளர்கள்:

அனுபவமுள்ள பெண் நெசவாளர்கள்தேவை முன் அனுபவம், நற்சாட்சிப் பத்திரங்களுடன் 22-3-68 வெள்ளிக்கிழமை நேரில் சமூகமளித்து கொடுக்கவும். போடிங் வசதிகளும் உண்டு. அன்னம்ஸ் சாறி இண்டஸ்றீஸ், கோவில்வீதி, மானிப்பாய்.[?] 1620

மனேஜர்:

எமது அச்சகத்தில் கடமையாற்றுவதற்கு மனேஜர் தேவை. பிணைப்பணம் கட்டவேண்டும். நேரில் சமுகந்தரவும். இலங்கை நாயகி அச்சகம், பருத்தித்துறை வீதி, [நல்லூர் மாக்கட்], யாழ்ப்பாணம். 1623

### விற்பனைக்கு

டிராக்டர்

புதிய 25 ஸ்ரீ 3426 பெரியபியட் டீசல் டிராக்டர், பெட்டியுடனும், மற்றும் சிறு கலப்பை, மோல்போட், டிஸ்க் கலப்பைகளுடனும் உடனடி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு பூஜன்ஸ், 71, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1621

காணி

கொக்குவில் கிழக்கு ஆடியபாதர் வீதியில் இருக்கும் மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு. கீழ் உள்ள விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். ச. சின்னத்துரை, ரயில்ரோட், கொக்குவில். 1622

## எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், செவ்வாய்

300 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அபகரித்ததாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கொன்றில் எதிரியை சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா நேற்று விடுதலை செய்தார்.

இவ் வழக்கில் கதிரவேற்பிள்ளை சின்னம்மா என்பவரின் 300 ரூபா பெறுமதியானதங்கச் சங்கிலியை அபகரித்ததாக வட்டக்கச்சியைச் சேர்ந்த ஆறுமுகம் கந்தவனம் என்பவருக்கு எதிராக கிளிநொச்சி பொலிஸார் குற்றம் சாட்டியிருந்தனர். எதிரி தரப்பில் புறக்டர் எஸ். லோகேஸ்வரனின் அனுசரணையுடன், வழக்கறிஞர் எஸ். நாகராஜாவும், வழக்காளி தரப்பில் பொலிஸாரின் அனுசரணையுடன் புறக்டர் வி. செல்லத்தம்பியும் ஆஜராகியிருந்தார்கள். [கா. நி]

## நாவற்குழி வித்தியாலயத்திற்கு முதலிடம்

சாவகச்சேரி, திங்கள்

சாவகச்சேரி வட்டார உடற்பயிற்சிப் போட்டியில் நாவற்குழி மகாவித்தியாலயம் 13 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் முதலிடத்தைப் பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தங்கச்சந்தை இரு கூருகப் பிரிக்கபபடும்

## தங்கக் கூட்டு நாடுகள் வாஷிங்டனில் செய்துள்ளமுடிவு

வாஷிங்டன், மார்ச் 18

இங்குகூடியுள்ள, ஐரோப்பிய தங்கக்கூட்டுநாடுகளின் ஏழினதும் மத்திய வங்கிப் பிரதிநிதிகள், தங்கச் சந்தையை இரு கூறுகப் பிரிப்பதென முடிவு செய்துள்ளனர்.

உத்தியோகபூர்வமாகத் தமது நாடுகளுக்கிடையே யான தங்க விற்பனைக்கு தற்போதைய விலையே நிலவுமெனவும், தனிப்பட்ட விற்பனைக்குத் தங்கம், அதன் சொந்த விலைமட்டத்தைக் கண்டு கொள்ளவேண்டியதுதான் என்றும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

தமது தங்கச் சேமிப்புகளிலிருந்து தங்கமெதையும் லண்டன் சந்தைக்கோ அல்லது வேறெங்குமோ இனி விற்பதில்லை எனவும் ஏழு தங்கக் கூட்டு நாடுகளும் முடிவுசெய்திருக்கின்றன.

இதன்மூலம், தங்கக்கூட்டு நாடுகளிலுமுள்ள தங்கத்தை வாங்கும் சந்தர்ப்பம் சாதாரண வியாபாரிகளுக்குக் கிடைக்கமுடியாது.

### பிரிட்டனுக்கு உதவி

தங்கக்கூட்டு நாடுகள், பிரிட்டனுக்குமேலும் கடன் அளிப்பதெனத் தீர்மானித்துள்ளன. இந்தக் கடன் தொகையுடன், பிரிட்டனுக்கு இதுவரை அளிக்கப்பட்டுள்ள சர்வதேச கடன் தொகை400 கோடி டொலர் ஆகும்.

---

## கல்கத்தாவில் இப்போது அமைதி நிலவுகிறது

### ஒழுங்கைக் கடைப்பிடிக்குமாறு இந்திரா கோரிக்கை

கல்கத்தா, மார்ச் 18

அண்மையில் கலவரம் நடந்த கல்கத்தாவில், இப்போது நிலைமை அமைதியாகவும், கட்டுப்பாடாகவும் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலவரங்களின் போது மூவர் உயிரிழந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

நிலைமை கட்டுக்கடங்கப்பட்ட போதும், பொலிசார் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தளர்த்தவில்லை.

கலவரம் நடந்த, குறிப்பிட்ட சில பகுதிகளில், பல பொலிஸ் நிலையங்களிலிருந்தும் பொலிசார் கொண்டுவந்து நிறுத்தப்பட்டுள்ளனர். கல்கத்தாவில் இப்போது 1500 க்கு மதிகமான பொலிசார் நிலைகொண்டுள்ளனர்.

### இந்திரா வேண்டுகோள்

கல்கத்தாவிலிருந்து வெளியான இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் செய்தியொன்றில், மக்களை அமைதியாக இருக்கும்படியும், ஒழுங்கையும் சட்டத்தையும் மதித்து நடக்கும்படியும் அவர் கேட்டுள்ளார்.

கல்கத்தாவுக்கும், மற்ற இடங்களைப் போல், அதன் சொந்தப் பிரச்னைகள் இருப்பதைத் தாம் உணர்வதாகக் குறிப்பிட்ட பிரதமர், பிரச்னைகளைப் பலாத்காரம் மூலம் தீர்த்துக் கொள்ள முற்படுவது தவறு என்று அது குழப்பம் விளைவிப்போருக்கே இடமளிக்குமென்றும் எச்சரித்துள்ளார்.

---

## பிரான்சின் நிலை பற்றி பிரிட்டிஷ் மத்திய வங்கி அதிபர் கவலை

லண்டன், மார்ச் 18

தங்கக்கூட்டு நாடுகளின் தங்க விற்பனை, விலை இவை பற்றிய முடிவுகள் குறித்துக் குறிப்பிடுகையில், இம் முடிவுகளைப் பிரான்சும் மதித்து நடக்குமா என்பது பிரச்னையே என்று இங்கிலாந்து மத்திய வங்கி கவர்னர் சந்தேகம் தெரிவித்திருக்கிறார்.

தங்கக்கூட்டிலிருந்து பிரான்ஸ், கடந்த ஜூன் மாதம் விலகிவிட்டது. அதுடன், பிரான்ஸ், வாஷிங்டனில் நடைபெறும் தங்கக் கூட்டுநாடுகள் மாநாட்டுக்கு அழைக்கப்படவுமில்லை.

இதற்கிடையில், லண்டன் தங்கச் சந்தை, அடுத்த மாதம் 1-ம் திகதிவரை மூடப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தங்க நெருக்கடி மற்றி விரிவாக ஆராய, பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் இன்று பிற்பகல் தமது மந்திரி சபையை அழைக்கவிருக்கிறார்.

---

## செக். அதிபர் நொவோட்னி தலைமைக்குச் சவால்

### பதவியிலிருந்து விரைவில் விலகக்கூடும்

பிராக், மார்ச் 18

செக்கோஸ்லாவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரிகள், செக். ஜனாதிபதி திரு. அன்டொனி நொவோட்னியைத் தமது தலைமைப் பதவியிலிருந்து விலகி விடுமாறு கேட்டுள்ளதாகப் பிராக் செய்திகள் தெரிவிக்கின்றன.

திரு. நொவோட்னி தங்கியுள்ள கோட்டைக்குச் சென்று, அவரைக் காண வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட ஒரு தூதுகோஷ்டியிடம், அவருக்குச் சுகமில்லை என அறிவிக்கப்பட்டதாம்.

திரு. நொவோட்னி, செக்கோஸ்லாவாக்கிய கம்யூனிஸ்ட்கட்சியின் கூட்டமொன்றுக்கு அழைக்கப்பட்டு, அவரது கடந்த காலக் கொள்கைகளை விளக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவார் என இங்குள்ள அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், புதிய கம்யூனிஸ்ட் கட்சி உத்தியோகத்தர் தெரிவு, இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

---

## வியட்னும் போரை எதிர்த்து லண்டனில்மாபெரும்ஆர்ப்பாட்டம்

### அமெரிக்க தூதரகத்தின் மீது கல் வீச்சு

லண்டன், மார்ச் 18

**நேற்று லண்டனில், வியட்னும் போரை எதிர்த்துப் பிரம்மாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலமும், ஆர்ப்பாட்டங்களும் அங்குள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்னல் நடைபெற்றன.**

நூற்றுக்கணக்கான பொலிசார் 15,000க்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களுடன் மோதினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள், அமெரிக்கத் தூதரகத்தின் மீது கற்கள், புகைக்குண்டுகள், பட்டாசுகள் முதலியவற்றை எறிந்தனர்.

இதைத்தொடர்ந்து, ஆர்ப்பாட்டக்காரர்களும் பொலிசாரும் ஓடி ஓடித் தெருக்களில் சண்டையிட்டனர். இதன்விளைவாகச் சிலருக்குக் காயமேற்பட்டது. பலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

## அமெரிக்க தூதரகஅதிகாரி சுவீடனில் தாக்கப்பட்டார்

ஸ்டொக்ஹோம், மார்ச் 18

சுவீடனில், அதன் தலைநகரான ஸ்டொக்ஹோம் அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் ஆர்ப்பாட்டக்காரர் சிலரால் தாக்கப்பட்டு, அவரிடமிருந்து சில தஸ்தாவேஜுகளும் பறிக்கப்பட்டன.

சுவீடனில் தஞ்சம் புக விரும்பிய இரண்டு அமெரிக்கருடன், அவர்கள் மனதை மாற்றும் நோக்கத்துடன், இந்த உத்தியோகத்தர் தமது காரியாலயத்தில் வைத்துப்பேசிக்கொண்டிருந்தார். அப்போது, சுவீடிஷ் மாணவர்கள்,வெளியே கூடி நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களைச் சந்திக்க அந்த உத்தியோகத்தர் காரியாலயத்திற்கு வெளியே வந்தபோதுதான் அவர் மாணவர்களால் தாக்கப்பட்டார்.

பொலிசார் ஸ்தலத்துக்கு விரைந்து அமைதியை நிலை நாட்டினர். சில மாணவர்களை அவர்கள் கைதுசெய்தனர்.

சுவீடனில் தஞ்சம் கேட்க விரும்பிய இரு அமெரிக்கரும் பின்னர் தமது மனதை மாற்றிக்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### பரீட்சைகள் பின்போடப்பட்டன

லக்னோ, மார்ச் 18

உத்தரப் பிரதேசத்திலுள்ள அலஹபாத்தில் அண்மையில் ஏற்பட்ட கலவரங்களைத் தொடர்ந்து அங்கு நிலவும் நெருக்கடி நிலைமையினால், இன்று அலஹபாத்தில் நடைபெறவிருந்த கல்லூரி, பல்கலைக்கழகப் பரீட்சைகள் அனைத்தும் நான்கு நாட்களுக்குப் பின் போடப்பட்டுள்ளன.

### கூட்டுமுறையில் கால் நடை வளர்க்க வகைசெய்க

மானிப்பாய், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள படித்த வாலிபர்களுக்கு கிளிநொச்சிப்பகுதியில் காணிகளை வழங்கி கூட்டுமுறையில் அவர்கள் கால் நடை வளர்ப்பைமேற் கொள்வதற்கும், உப உணவுப்பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கும் வழிவகுத்துக் கொடுக்குமாறு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை கிளிநொச்சி வாலிப முன்னணி இயக்கம் கேட்டுள்ளது.

## டிட்டோவின்விசேஷதூதுவர் நாஸரைச் சந்தித்தார்

கெயிரோ, மார்ச் 18

யூகோஸ்லாவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோவின் விசேஷ தூதுவரான திரு. காடெயில், கெயிரோவில் ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி நாஸரைச் சந்தித்துப் பேசிவிட்டு நேற்று பெல்கிரேடுக்குப் புறப்பட்டுள்ளார்.

திரு. காலடயில்,டிட்டோவிடமிருந்து விசேஷ செய்தியொன்றை ஜனாதிபதி நாஸரிடம் கையளித்தார். அச்செய்தியில், பராத அடிப்படையில் கூட்டுச் சேரா நாடுகளின் சமாதான மாநாடொன்றை விரைவில் அழைப்பது பற்றிய டிட்டோவின் ஆலோசனை அடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே, திரு. காடெயில், ஐந்து ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

---

## மொழிப் பிரச்னையை அணுகுவதில் பொறுமை வேண்டும்

### காமராஜ் வேண்டுகோள்

சென்னை, மார்ச். 18

மொழிப்பிரச்னையில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருக்கவேண்டுமென முன்னுள் காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் கூறியுள்ளார்.



பலவேறு மொழிகள் பேசும் இனங்கள் வாழும் இந்தியநாட்டில், மொழியை விட்டுப் பொறுப்பை இழப்பது பொருந்தாது என்று அவர் குறிப்பிட்டார்.

சென்னை சட்டக் கல்லூரியின் விழாவொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு. காமராஜர், இவ்வாறு கருத்துவெளியிட்டார்.

### தேசிய பிரச்னையாக இருக்கவேண்டும்

மொழிப் பிரச்னையைத் தேசியப் பிரச்னையாகக் கருதவேண்டுமென்றும், நாட்டின் ஒற்றுமைக்கு முதலிடம் அளித்தே அதை அணுகவேண்டுமென்றும் கூறிய திரு. காமராஜர், எந்த ஒரு மொழிக்கெதிராகவும் பாரபட்சம் காட்டப்படுவதாகக் கருத்து ஏற்படாத வகையில் மத்திய அரசாங்கமும் நடந்து கொள்ளவேண்டுமென மேலும் தெரிவித்தார்.

### ஜனநாயக சோஷலிசம்

காங்கிரசின் நோக்கம் ஜனநாயக சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதேயாகும் என திரு. காமராஜ் கூறினுர். அந்த சமுதாயத்தை உருவாக்கும் பணியில் இளம் வழக்கறிஞர்களுக்கும் பங்குண்டு என்றுர் அவர்.

ஜனநாயக சோஷலிச இலட்சியத்தை நிறைவேற்ற இளந்தலைமுறையினரே கடுமையாக உழைக்கவேண்டுமென்று திரு. காமராஜ் கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தன்னுடைய மனிதத் தன்மையை உணர்ந்துவிட்ட ஒருமனிதன் கடவுளுக்கு மாத்திரமே பயப்படுவான். வேறு யாருக்கும் அஞ்சமாட்டான்.

—காந்திமகான்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம்6ம் திகதி[19-3-68]

## அமெரிக்க அதிபர் தேர்தல்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில்முன்னாள் ஜனாதிபதியின் சகோதரரும் செனட்டருமான திரு. ரொபர்ட் கென்னடி போட்டியிட முன்வந்திருக்கிறார். இச்செய்தி அமெரிக்க மக்களுக்குமட்டுமல்லஉலகின் பலபாகங்களிலுமுள்ள பெருந்தொகையான மக்களுக்கும் மகிழ்ச்சியளிக்கும்.

சிறிதுகாலமே அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவிவகித்த போதிலும் நேர்மையும் உறுதியும் சமாதானத்தில் ஆர்வமும் கொண்ட திரு ஜோன் எப். கென்னடி ஆற்றிய பணியை உலகம் இன்றும் நினைவில் வைத்திருக்கிறது. திரு. கென்னடியின் அகால மறைவுக்குப் பின் கென்னடி குடும்பத்தவர் ஒருவரே அப் பதவிக்கு வரவேண்டுமென்பதையும்அதற்கானதகுதி அவர்களுக்கு இருக்கிறதென்பதையும் உணர்ந்து எதிர்பார்த்திருந்தது. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் நோக்கம் திரு. ரொபர்ட் கென்னடிக்கு இல்லையென்றசெய்திகள் சில மாதங்களுக்கு முன்னர்வரை வெளிவந்தபோது உலகில் பொதுவாக ஏமாற்றமே எதிரொலித்தது.

திரு. ஜோன்சனுடன் தமக்குத் தனிப்பட்ட கோபதாபமெதுவு மில்லையென்றும் வியட்னாம் மற்றும் பல விஷயங்களில் ஜோன்சன் நிர்வாகம் கடைப்பிடிக்கும் கொள்கை 'அழிவுக்குவழி வகுப்பதாக இருக்கிறது' என்றும்திரு. கென்னடி கூறுகிறார். வியட்னாமில் அமெரிக்கா கடைப்பிடித்துவரும்கொள்கைஉலக மக்களின் அதிருப்தியையும் எதிர்ப்பையுமேஅமெரிக்காவுக்குத் தேடிக்கொடுத்திருக்கிறது.அமெரிக்க மக்கள்கூட வியட்னாம் பிரச்னையில் அதிபர் ஜோன்சனின் நிர்வாகத்தை எதிர்க்கிறார்கள். யார் எதிர்த்தாலும் ஜோன்சன் தமது போக்கை மாற்றிக்கொள்வதாகத் தெரியவில்லை. வியட்னாம் பிரச்னைமட்டுமல்ல பலவிஷயங்களிலும் ஜோன்சன் அமெரிக்காவிலும் வெளிநாடுகளிலும் செல்வாக்கை இழந்துவருகிறார்.

இந்நிலையில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் திரு.ரொபர்ட் கென்னடி போட்டியிட முன்வந்திருப்பது அமெரிக்கசரித்திரத்திலேயே புதியதிருப்பம் ஒன்றை ஏற்படுத்தக்கூடியது. ஜனநாயகக்கட்சியின் அபேட்சகராக திரு. ரொபர்ட் கென்னடி தெரிவு செய்யப்பட்டால் அடுத்த ஜனாதிபதியாக திரு.கென்னடி தெரிவு செய்யப்படுவது நிச்சயம் என்று இப்போதே சொல்லலாம். திரு. ஜோன்சன் தமது மதிப்பைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாதிருப்பதுதான் ஒரேவழி.

# "எழுத்தாளர்களின் படைப்புகளை வெளியிட ஒரு ஸ்தாபனம் மிக அவசியம்"

## தமிழ்ப் பேராசிரியரின் கருத்து

நாவலப்பிட்டி, திங்.

'இலங்கையில் இலக்கியம் படைக்கப் பேரார்வம் கொண்ட பெரும்பாலான எழுத்தாளர்கள் தங்களது படைப்புகளை நூல் வடிவில் வெளியிடமுடியாது பெரிதும கஷ்டப்படுகின்றனர். தங்களது படைப்புகள் நூலுருவில் வெளிவரும்போது தான் உண்மையாகவே எழுத்தாளர்களுக்கும் ஆர்வம் பிறக்கிறது. மக்கள் மத்தியிலும் அதுபரவ ஏதுவாகின்றது. எனவே இந்நாட்டு எழுத்தாளர்களின் படைப்புக்களை நூல்வடிவில் வெளியிட ஒரு ஸ்தாபனம் மிக அவசியமாகும்.'

இவ்வாறு கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற கண்டி திரித்துவக் கல்லூரி ஆசிரியர் திரு.நா. செல்லத்துரை எழுதிய 'முளை வெடித்த மொட்டு' என்ற நாவல் வெளியீட்டுவிழாவில் சொற்பொழிவாற்றிய இலங்கைப் பேராதனை பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் திரு. சொ.செல்வநாயகம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:— 'இந்நாட்டில் எழுத்தாளர்கள் அனைவரும் சேர்ந்து கூட்டாக மேற்கூறிய ஸ்தாபனத்தைநிறுவினால் ஏராளமான இலக்கியங்கள் வெளிவருவதோடு இந்நாட்டிற்குரிய உயரிய இலக்கியப் படைப்புகளுக்கான வழிவகைகளையும் வகுக்க ஏதுவாகும்.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் ஜனாப் எஸ். எம். ஏ. ஹசன் தலைமை தாங்கிய மேற்படி விழா நடைபெற்றது.

இவ்விழாவில் உரை வழங்கிய கொழும்பு பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் திரு. க. கைலாசபதி தமது உரையில் கூறியதாவது:-

தேசிய உற்பத்திப் பெருக்கத்திற்கு அதிக சிரத்தை காட்டும் இக்காலத்தில் வாழுகின்ற நம் தேசத்தின் இன்றியமையாத் தேவைகளில் ஒன்றான இலக்கிய உற்பத்தியை இந்நாட்டிலேயே பெருக்குவதற்கும் அபிவிருத்தியாக்குவதற்கும் ஆவன செய்யவேண்டும்

அவ்வழியில் கடந்த சில காலங்களாக பல இலக்கிய நூல்கள் வெளிவருவது வரவேற்புக்குரியதே. இலக்கியமும், இந்நாட்டின் ஏனைய சுயதேவைப் பொருட்களைப் போலவே இந்நாட்டுக்கு இறக்குமதியாகிக் கொண்டிருந்தது. இறக்குமதியைக் குறைத்துஇங்கேயே இலக்கியவளர்ச்சிக்கான ஆக்கமுயற்சிகளுக்கு இந்நாட்டு எழுத்தாளர்கள் பெரும் ஆர்வம் கொண்டு தொண்டாற்றி வருகின்றனர்"

மற்றும் திருவாளர்கள் இரா. சிவலிங்கம், கவிஞர். எஸ். எஸ். நாதன். திரு. ஜே. டி. அந்தோனி. திரு. இராமானுஜம், திரு. நடராஜா ஜெயப்பிரகாஷ் ஆகியோரும் பேசினர்.

மத்திய மாகாண இந்து மாமன்றச் செயலாளர்திரு கே. செல்லமுத்துப்பிள்ளை முதல் பிரதியை வாங்கி வெளியீட்டை ஆரம்பித்து வைத்தார்.

## இன்றைய பலன்

[19-3-68]

செவ்வாய்க்கிழமை

[பங்குனி மீ 6 உ]

திதி- பஞ்சமி பகல் 2-25 மேல் ஷஷ்டி

நட்சத்திரம்-விசாகம் காலை 10-45 மேல் அனுஷம்

ராகுகாலம்- 3-19—4-49

சுபநேரம்- 10-49 — 12-19

இன்று பிறந்தவர்களுக்கு முதலில் அதிர்ச்சி தரும் சம்பவங்கள். அவற்றைத்தொடர்ந்து ஆறுதலளிக்கும்இதமான நிகழ்ச்சிகள் இடம்பெறும். பொதுவாக இவ்வாண்டு புரட்சிகரமான தாகவும், புதிய அனுபவங்கள் மோதும் களமாகவும் அமையும். பிடிவாத குணம் மேலோங்கிநிற்கும். பெண்களால் தொல்லைகள் உண்டு. மாதர்களாயின் நாவடக்கம் நன்று. வீண் போட்டிகளில மாட்டிக்கொள்ளாதிருக்கவும்.

மேஷம்- பகைமூட்டம், பதட்டத்தைத் தவிர்.

ரிஷபம்- மாரனின் கணை, மனக்கிளர்ச்சி.

மிதுனம்- எதிர்பார்த்தது தடைப்படும், விரக்திநிலை.

கடகம்- பிதாவழிப் பெருமை,பிறரும் வாழ்த்துவர்.

சிம்மம்-பதவியில் தகுதி மேலதிகாரிகள் பரிவு.

கன்னி- நிதிவசதி, நிலையான கொள்கை.

துலாம்- தொழில்கவலை தனிமையில் விருப்பு.

விருச்சிகம்- வாழ்க்கையில் புயல்,வரவும்தடைப்படும்.

தனுசு- தேடிவரும் உறவு, நாடிவரும் பொருள்.

மகரம்- இருண்ட மனம், குறுக்குவழி நினைப்பு.

கும்பம்- அன்னைமொழி அமிர்தம், அமைதியுடன் இரு.

மீனம்-அமைதிதாலாட்டும் அன்பு மனம்.

— சோதிடக்கலாநிதி — திருமலை வேலுப்பிள்ளை

## செல்வச்சந்நிதி மகா சங்காபிஷேகம்

வல்வெட்டித்துறை, திங்கள்

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில் மகா சங்காபிஷேகம் இம்மாதம் 25ந்திகதி திங்கட்கிழமை நடைபெறவிருக்கிறது. அன்று இரவு விசேஷ உற்சவமும் நடைபெறும்.

## சூசையப்பர் திருநாள்

யாழ்ப்பாணம்,செவ்

மாதகல் சாம்பல் துறை சூசையப்பர் திருநாள் நாளை நடைபெறவிருக்கிறது. காலை 7மணிக்கு வண. இ.ஏ எச். தேவதாசன் திவ்விய பூஜையை நடாத்துவார் மாலையில் 'ஞானதீபன்' நாட்டுக் கூத்து நடைபெறும்.

## வருடாந்த உற்சவம்

நாவலப்பிட்டி, திங்கள்

நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த உற்சவம் பத்து தினங்கள் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

9-ம் நாள் யாழ்ப்பாணவாசிகள் உபயமாக நடத்திய விழா வெகு விமர்சையாகவிருந்தது.

## குடத்தனை கி. ச. தேர்தல்

புலோலி, திங்கள்

குடத்தனை கிராமசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் நேற்று தேர்தல் அதிகாரியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஒருவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். கட்சிரீதியாக நால்வர் போட்டியிடுகிறார்கள்.

போட்டியிடுவோர் விபரம் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம்: வி.துரையப்பா, வி. தணிகாசலம். 2-ம் வட்டாரம்: மு மாணிக்கம்,வே. இராசையா[த.கா] 3-ம் வட்டாரம்: நி. யோ. மரியாம்பிள்ளை, யாக்கோப் சிமியோண்பிள்ளை. 4-ம் வட்டாரம்: வி.வைரவப்பிள்ளை, மு. பெரியதம்பி [த. கா] 5-ம் வட்டாரம்: வி.வேலுப்பிள்ளை, க. வேலுப்பிள்ளை [த. கா], கணபதி சின்னவன். 6-ம் வட்டாரம்:எஸ். ஆவ்வாப்பிள்ளை, வி. பொன்னையா [த.கா] 7-ம் வட்டாரம்: க. ஏரம்பு, கா.சிவசுப்பிரமணியம். 8-ம் வட்டாரம்: திலகநாதர் சந்திரசேகரம் [போட்டியில்லை]. 9-ம் வட்டாரம்: க சிவப்பிரகாசம், ரி நாகமுத்து. பி. நாகமுத்து.10-ம் வட்டாரம்: க. க.சிவசாமி, வி. விஜயரட்னம்: ஆ. முருகேசு 11-ம்வட்டாரம்: எஸ்.குலதிலகபிள்ளை, கதிரேசு கந்தையா.

## பயிற்சி பெறுவர்

உடுவில், திங்கள்

கந்தரோடையைச் சேர்ந்த குமாரசாமி இரவீந்திரன் என்பவர் பட்டுநெசவு தொழிலில் பயிற்சி பெறுவதற்காக இந்தியா செல்லவிருக்கிறார்

## சிவப்பிராமண சங்கக் கூட்டம்

உடுவில், திங்கள்

அகில இலங்கை சிவப்பிராமண சங்கத்தின் வருடாந்த மகாசபைக் கூட்டம் சுன்னாகம் ஸ்ரீ சதாசிவ பிராசீனப் பாடசாலை மண்டபத்தில் இம்மாதம் 21ந் தேதி மாலை நடைபெறவிருக்கிறது.

## நெசவுநிலையம் மூடப்பட்டது

சுழிபுரம், திங்கள்

பண்ணாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட நெசவு நிலையம் நூல் கிடைக்காத காரணத்தால் மூடப்பட்டுள்ளது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

கச்சதீவு விவகாரத்தில் சீனசார்புகம்யூனிஸ்ட் பத்திரிகையொன்று மறைமுகமாக சீனத்துக்கு வக்காலத்து பேச வந்திருக்கும் மர்மம் தான் என்ன?

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் ஏற்பட்டுள்ள இச்சிறிய தகராறு சீன-இந்திய தகராறுகவும் முடியக்கூடுமோ?

—வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

கச்சதீவுபலவீதமான கைச்சல்களை ஏற்படுத்திவிட்டுள்ளது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இருக்கும் இச்சிறியதீவு உண்மையிலேயே 'கைச்சல்' தண்ணீர் உள்ள ஒரு தீவு என்றபடியினால்தான் அந்நாமம் படைத்ததென்று சிலர் கூறுகிறார்கள்.

இது எப்படியிருப்பினும் கச்சதீவு இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் கைச்சலை உண்டுபண்ணிவிட்டது.

இராமநாதபுரம் மகாராஜா இதனைத் தமது சமஸ்தானத்துக்குரியது என்று உரிமை கோருகிறார். இந்திய அரசாங்கம் சமஸ்தானங்களைப் பாரமெடுத்தபின்பு அது இந்திய அரசாங்கத்துக்கே சொந்தம் என்றும் உரிமை கோரப்படுகிறது. கச்சதீவு இலங்கைக்குத்தான் சொந்தமானதென்று இலங்கை அரசாங்கம் ஒரு பக்கம் சொந்தம் பாராட்டுகிறது.

உண்மையில் யாருக்குத்தான் இந்தத்தீவு சொந்தம்? எவருக்குமே தெரியாது!

இதற்கிடையில், கச்சதீவிலுள்ள அந்தோனியார் கோவில் க்ஷேத்திரத்தை கடந்த 43 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை கத்தோலிக்கசபையே பராமரித்து வருகிறதென்றும், ஆகையினால் அது இலங்கைக்கே சொந்தமானதென்றும் யாழ்ப்பாண மேற்றிராணியார் கூறுகிறாரென்று இலங்கை கத்தோலிக்க வார இதழ் 'சத்தியவேத பாதுகாவலன்' எழுதுகிறது.

காலஞ்சென்ற பிரபல சரித்திராசிரியரான வண. பிதா. எஸ். ஜி. பெரேரா மொழிபெயர்த்த ஒரு போர்த்துக்கீச நூலில், 1705-ம் ஆண்டு கோவாவிலிருந்து தூத்துக்குடி வழியாக கப்பலில் வந்த சில கத்தோலிக்க பாதிரிமார் இராமேஸ்வரத்தைத் தாண்டிவந்தபோது: கச்சதீவைக்கண்டுஅதில் அந்தோனியார்கோவில்ஒன்றை ஸ்தாபித்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார் என்றும் 'சத்தியவேதபாதுகாவலன்' கூறுகிறது.

இச்சம்பவம்பற்றி ஆதாரம் கூறும் ஓலைச் சுவடிகளும் இருப்பதாக இப்பத்திரிகை கூறுகின்றது.

கச்சதீவுபற்றி இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் சச்சரவு இருப்பதைத் தொடர்ந்து இவ்வருடம் அந்தோனியார் திருவிழாவில் பங்குபற்றுவதில்லையென்று இலங்கை கத்தோலிக்கசபை தீர்மானித்திருப்பதாகவும் அப்பத்திரிகை தெரிவிக்கின்றது.

இத்தீர்மானம்-அதாவது கச்சதீவுதிருவிழாவில் பங்குபற்றுவதில்லையென்ற கத்தோலிக்கசபையின் தீர்மானம்-பிழையானதென்றுசீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் வாரப்பத்திரிகையாகிய 'செங்கொடி' குற்றஞ்சாட்டுகிறது.

'வழமையாக நடக்கும்ஒரு காரியத்தை இவ்வருடம் கைவிட்டுவிட்டதால்கத்தோலிக்க திருச்சபை மறைமுகமாக இந்தியாவைஆதரித்து அதன்மூலம் இலங்கைக்கு ஓர் இக்கட்டானநிலைமையை ஏற்படுத்தியுள்ளதாக விஷயமறிந்தவட்டாரங்கள் தெரிவிக்கின்றன' என்று 'செங்கொடி' கூறுகிறது.

'ஒரு சிறிய விஷயத்தை அளவுக்குமிஞ்சி பெருப்பிக்க விரும்பாவிட்டாலும், இந்தியாவின் விஸ்தரிப்புக்கொள்கைக்கு இதுவுமோர் எடுத்துக்காட்டு என்று சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது' என்றும் 'செங்கொடி குறிப்பிடுகிறது.

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெங்காய உற்பத்தியில்

# இன்னும் இரண்டு ஆண்டுகளில் இலங்கை தன்னிறைவுகாணும்

## விவசாய இலாகா நம்பிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

1960-ம ஆண்டிலிருந்து 1966-ம் ஆண்டுவரை இலங்கை அரசாங்கம் சின்ன வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்காக 1 கோடி 74 லட்சத்து 34 ஆயிரத்து 913 ரூபாவை வெளிநாட்டுச் செலாவணியாக செலவு செய்துள்ளது இதில் 1960 ம் ஆண்டுமட்டும் 32 லட்சத்து 83 ஆயிரத்து 35 ரூபாவை செலவு செய்துள்ளது.

இந்த ஏழு வருடங்களிலும் செலவு செய்யப்பட்ட பணம் இதற்கு முன்னைய ஆண்டுகளில் சின்ன வெங்காயத்தை இறக்குமதி செய்ய ஒதுக்கப்பட்ட பணத்திலும் பார்க்க சுமார் 35 வீதம் கூடுதலானது எனத் தெரியவந்துள்ளது. குறிப்பிட்ட இந்த 7 ஆண்டுகளிலும் 10 லட்சத்து 98 ஆயிரத்து 588 அந்தர் சின்ன வெங்காயம் இங்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இது பற்றிய கணக்கெடுப்பின் போது 1960-ம் ஆண்டில் 32, 83 035 ரூபா பெறுமதியான 203, 366 அந்தரும் 1961-ம் ஆண்டில் 28, 91,411 ரூபா பெறுமதியான 211.968 அந்தரும் 1962-ம் ஆண்டில் 25,16 403 ரூபா பெறுமதியான 165, 714 அந்தரும் 1963-ம் ஆண்டில் 17,97,169 ரூபா பெறுமதியான 152, 799 அந்தரும் 1964-ம் ஆண்டில் 28, 22,228 ரூபா பெறுமதியான 140 517 அந்தரும் 1965-ம் ஆண்டில் 25, 35, 885 ரூபா பொறுமதியான 130,286 அந்தரும் 1966ம் ஆண்டில் 16,19,582 ரூபா பெறுமதியான 103, 938 அந்தரும் இறக்குமதி செய்யப்பட்டதாக தெரியவருகிறது.

பம்பாய்

வெங்காயம்

இது தவிர 1964-ம் ஆண்டிலிருந்து 1966-ம் ஆண்டுக்குள்பட்ட 3 ஆண்டுகளில் பம்பாய் வெங்காய இறக்குமதிக்குமட்டும் இலங்கை அரசாங்கம் 5 கோடி 93 லட்சத்து 11 ஆயிரத்து 508 ரூபாவை செலவழித்துள்ளது, இத் தொகை 7 ஆண்டுகளில் சின்ன வெங்காயத்தை இறக்குமதி செய்ய செலவழிக்கப்பட்ட அந்நிய செலாவாணியிலும் பார்க்க சுமார் 4 மடங்கு அதிகமானதாகும்.

1964-ம் ஆண்டில் 2, 29, 83,868 ரூபா பெறுமதியான 12.44 311 அந்தரும் 1965-ம் ஆண்டில் 1,81, 40, 802 ரூபா பெறுமதியான 11.42,473 அந்தரும் 66-ம் ஆண்டில் 181, 86,838 ரூபா பெறுமதியான 11,51, 530 அந்தருமான பம்பாய் வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டதாக புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவந்துள்ள .

வெங்காய இறக்குமதிக்கு வெளிநாட்டுச் செலாவணியைமுற்றாக நிறுத்த அரசாங்கம் மேற் கொண்டுள்ள முயற்சிகள் 1970-ம் ஆண்டில் பூரண பலன் கொடுக்குமென விவசாய இலாகா எதிர் பார்க்கப்படுகிறது.

—— (கா. நி.)

# 'விவசாயப் படையில் சேர்ந்து நாட்டிற்காக உழையுங்கள்'

## கிளிநொச்சி எம். பி. வேண்டுகோள்

மல்லாவி, திங்கள்

விவசாயப் படையில் சேர்ந்து நாட்டின் அபிவிருத்திக்கு உழைக்க முன் வருமாறு கிளிநொச்சி எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் வாலிபர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

யோகபுரம் 2-ம் பகுதி குளக்கோட்டரசன் கிராம முன்னேற்றச் சங்கத்தால் நிறுவப்பட்ட நெசவுநிலைய திறப்பு விழாவின் போது கிளிநொச்சி எம். பி. மேலும் கூறியதாவது: வாலிபர்களில் பலர் வேலையின்றி கஷ்டப்படுகின்றனர். படித்துவிட்டால், அரசாங்க இலாகாக்களில் உத்தியோகம் கிடைக்கும் என்று எண்ணுவது தவறு. இவ்விதம் உத்தியோகம் தேடி அலைவதிலும் பார்க்க விவசாயப்படையில் சேர்ந்து நாட்டின் அபிவிருத்திக்கு உழைக்க வேண்டும்.

நெசவுநிலையத்தைதிறந்து வைத்த யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கூறியதாவது: நெசவுநிலையங்கள் அமைத்தால் மட்டும்போதாது. ஊக்கமாக முயற்சிசெய்ய வேண்டும்.

இங்கு நல்ல ரக துணிகளை தயாரித்தால், வெளிநாட்டிருந்து வரும் சேலைகளுக்கு மதிப்பு குறைந்து விடும்.

——

### ஆயிரக்கணக்கானோர் அச்சம்

திருக்கோணமலை, திங்கள்

நீதியரசர் திரு அலஸின் தீர்ப்பின் பிரகாரம் முடிக்குரிய காணி, விநியோகச் சட்டத்தின்கீழ், காணிக்கான அனுமதிப் பத்திரங்களில் மாவட்ட அரசாங்க அதிபர்களே கைச்சாத்திட வேண்டுமென்றும், அல்லது காணி ஆணையாளரின் பிரதிநிதிக வேண்டுகோளுக்கிணங்க மாவட்ட அரசாங்க அதிபர்களின் அலுவலக உதவியாளர்கள் அப்பத்திரங்களில் கைச்சாத்திட அனுமதிக்கப்படுவரென்றும் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இங்கு முடிக்குரிய காணிகள் விநியோகம் செய்யப்பட்டவர்களிடையே மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவெனில் இங்கு முடிக்குரிய காணிகள் விநியோகிக்கப்பட்டவர்கள் யாவரினதும் அனுமதிப் பத்திரங்களில் மாவட்ட காணி உத்தியோகத்தர்களே கைச்சாத்திட்டுள்ளனர் என்பதே. நீதியரசரின் தீர்ப்பின் பிரகாரம் தங்கள் அனுமதிப்பத்திரங்கள் பெறுமதியற்றனவாகப் போய்விடுமோ என்று ஆயிரக்கணக்கானோர் அஞ்சுகின்றனர்.

### வளர்ந்த விட்டில் திருட முயன்றவர் றிமாண்டில்

சங்கானை, திங்கள்

சண்டிலிப்பாயில் கட்டுடை என்னுமிடத்தில் கதிரிப்பிள்ளை வேலுப்பிள்ளை என்பவரின் வளர்ப்பு மகள் ஒருவர் சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் பணம் உட்பட்ட பொதி ஒன்றுடன் வீட்டில் எவரும் இல்லாத சமயம் பார்த்து மாயமாக மறைந்து விட்டதைத் தொடர்ந்து சங்கானை பொலிஸ் சாஜன்டபின் சுபசிங்கா விசாரணை நடாத்தி நகைகளையும், பணத்தையும் கைப்பற்றி சந்தேக நபரையும் கைது செய்து றிமாண்டில் வைத்துள்ளனர்

# சுன்னாகம் பட்டினசபை தீர்மானங்கள்

உடுவில், திங்கள்

சுன்னாகம் சந்தையில் குத்தகைப்பணம் வசூலிப்பவர்களுக்கு இப்பொழுது வழங்கப்பட்டுவரும் கமிஷன் மேலும் 5 வீதமாக அதிகரிக்கப்பட இருக்கின்றது.

சுன்னாகம் சந்தையில் குத்தகைப்பணம் வசூலிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள சுமார் 24 பேர் இதனால் நன்மை பெறுவர்.

சுன்னாகம் பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் இன்று காலையில் மேற்படி பட்டினசபை மண்டபத்தில் நடைபெற்றபோது இத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

பட்டினசபையின் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

சிறுபான்மைத் தமிழ் மக்களின் சலவைத் தொழிலாளருக்கு அவர்களுடைய வீடுகளுக்கு அண்மையில் பட்டினசபையின் பொறுப்பில் கிணறுகள் கட்டிக்கொடுப்பதெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

——

### கார்லைசென்ஸ் பெறாதவர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

இம் மாத முடிவுக்குள் 1968-ம் ஆண்டுக்கான கார் ''லைசென்ஸை'' பெறாதவர்கள் மீது பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுப்பார்கள். இதனை வடபகுதி பொலிஸ் அதிபர் நேற்று அறிவித்தார்.

1968-ம் ஆண்டுக்கான கார் ''லைசென்சை'' புதுப்பிப்பதற்கான கடைசித் தவணை கடந்த டிசெம்பர் மாதம் 31-ம் திகதியாக இருந்த போதும் இக்கால எல்லை இம் மாதம் 31 ம் திகதி வரை அதிகரிக்கப்பட்டது. குறிப்பிட்ட 3 மாத கால எல்லையின் பின்னரும் கார் 'லைசென்ஸ்' புதுப்பிக்காதவர்கள் மீது அடுத்த மாதம் 1-ம் திகதியிலிருந்து பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொள்வர். [கா. நி]

### கேரதீவு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவேலைப்பகுதி அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்ரம கடந்த ஆகஷ்ட் மாதம் 17-ம் திகதி இங்கு வந்து நாட்டினார்.

ஆனால் இப்பகுதியை அண்மையில் பரிசோதனைசெய்த இலங்கை உப்புக்கூட்டுத்தாபனத்தைச்சேர்ந்தபிரெஞ்சு பொறியியல் நிபுணர்களே. இங்கு பாலம் அமைப்பதால் ஏற்படக்கூடிய கஷ்டங்களை எடுத்துக் கூறியுள்ளனர். 3000 அடி நிலப்பரப்பில் 300 அடி நீளமாக அமைக்கத்திட்டமிடப்பட்ட பாலம் கட்டுவதற்கான வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

இப்பாலம் அமைப்பதால் மழைகாலங்களில் நீரை மறித்துக்கட்டி உப்பு விளைவிப்பதில் ஏற்படக்கூடிய கஷ்டங்களை இந்நிபுணர்கள் உப்புக்கூட்டுத்தாபனத்துக்குதெரிவித்துள்ளனராம். இதனால்இவர்களின் ஆலோசனையுடன் பாலக் கட்டட வேலைபற்றியசகலதஸ்தாவேஜுகளும் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அமைச்சின் இறுதிமுடிவுகளைத் தொடர்ந்தே மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் இதுபற்றி கைத்தொழில் அமைச்சும், பொதுவேலைப்பகுதி அமைச்சும் ஆராய்ந்து முடிவுகளைத் தெரிவிக்குமென்றும், யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [கா. நி]

# "வர்த்தக ஒலிபரப்பு சிறுவர்களை கெடுத்துவிட்டது"

யாழ்ப்பாணம், செவ்

''இலங்கை வானொலி வர்த்தக ஒலிப்பரப்பு தினமும் மணிக்கணக்காக சினிமா டப்பா சங்கீதங்களை ஒலிபரப்பி, சிறுவர்களைப் பாழாக்கிவிட்டது. இதிலிருந்து சிறுவர்கள் மீள வேண்டுமானால் இவர்களுக்குத் தேவாரப் பதிகங்கள் பண்ணிசையுடன் பயிற்றுவிக்கப்படவேண்டும்.''

இவ்வாறு சுந்தரமடத்தில் பண்ணிசை மன்ற அங்குரார்ப்பண வைபவத்தை நாடத்திவைத்துப் பேசுகையில் யாழ். மாஜி மேயரான வழக்கறிஞர் திரு. எஸ். நாகராஜா தெரிவித்தார்.

அண்ணமலை இசைத் தமிழ் மன்றத்தால் ஆரம்பிக்கப்பட்ட இம்மன்றத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் திரு. நாகராஜா மேலும் தெரிவித்ததாவது:

எமது சிறுவர்களுக்குச் சமய அறிவும். தெய்வ பக்தியும் இல்லாமையாததாகும். இதற்குப் பண்ணிசை வகுப்புகள் அவசியம் தேவையானதாகும். தீய பழக்கங்களையும், பஞ்சமா பாதகங்களையும் சினிமாவும் சினிமா இசைகளும் பரப்புகின்றன. இதற்குப் பண்ணிசை மன்றங்களை ஆங்காங்கே அமைக்கவேண்டியது அவசியமாகும்.

இன்னும் பலர் இங்கு பேசினார்கள். சிறுவர்களின் இசை வகுப்புகளும் நடைபெற்றன. (கா. நி.)

### பட்டின......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வர் தெரிவித்ததாகவும் அறியப்படுகிறது.

உள்ளூராட்சி அமைச்சினால் நியமிக்கப்பட்ட தனிநபர்கமிஷனரான திரு. எஸ். என். இராசதுரை விசாரணையின்பின் சமர்ப்பித்த அறிக்கையில் காங்கேசன்துறை பட்டினசபையை நகரசபை அந்தஸ்துக்கு உயர்த்தும்படி சிபார்சுசெய்திருந்தார்

காங்கேசன்துறை பட்டினசபையை நகர சபையாக அந்தஸ்து உயர்த்துவதை பட்டின சபையின் 6 அங்கத்தவர்களில் 5 பேர் எதிர்த்திருந்தனர். 38 கிராம முன்னேற்றச் சங்கங்களும் 27 விளையாட்டு கழகங்களும் வாலிபர்கழகங்களும்மற்றும் ஸ்வதாபனங்களும் ஸ்தலஸ்தாபன சபை உறுப்பினர்களும் பலமாக நகரசபையாக்குவதை எதிர்த்தனர்.

——

### அண்ணா போட்டியின்றி தெரிவு

சென்னை, மார்ச் 18

தமிழ்நாடு மேல் சட்ட சபைக்கு தமிழகமுதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்தலஸ்தாபன தொகுதியில் திரு. அண்ணாதுரை தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கைதடி கி. ச.

### இன்று நியமன பத்திரங்கள் தாக்கலாகும்

சாவகச்சேரி, திங்கள்

நாவற்குழி கிராமசபை தற்போது இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டுதேர்தல் நடைபெற ஏற்பாடாகியுள்ளது இவற்றில் 6 வட்டாரங்களைக்கொண்ட கைதடி கிராமசபையின் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் நாளை தாக்கல் செய்யப்படுமெனவும் 8 வட்டாரங்களைக் கொண்ட நாவற்குழி கிராம சபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் நாளைமறுதினம் தாக்கல் செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

— —

### கப்பல் தீவிபத்து 11பேர் மரணம்

வாஷிங்டன், மார்ச் 18

அமெரிக்காவில், மிஸிஸிப்பி ஆற்றருகே, ஒருசரக்குக் கப்பல் தீப்பிடித்ததன் விளைவாக 11பேர் இறந்தனர்.

### விவசாயப் படையில் சேர விருப்பமா?

யாழ்ப்பாணம், செவ்.

விவசாயப்படைகளில் சேரவிரும்பும் வாலிபர் தங்கள் தொகுதி எம். பி.க்களிடமிருந்து கடிதங்கள் பெற்றுக்கொண்டுமுகாம்களுக்கு சென்றால் சேர்த்துக் கொள்வார்களென்று தெரிகின்றது.

ஒட்டிசுட்டானில் இன்றும் நாளையும் விவசாயப் படைக்கு ஆள்சேர்க்கப்படுவார்கள். இந்த முகாம்களில் சேரவிரும்பும் வாலிபர்கள் உடனயாகக் கடிதங்களுடன் சென்றால் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று விஷயமறிந்த ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

### கூட்டம் நடைபெறவில்லை

யாழ்ப்பாணம். செவ்.

நேற்று மாலை யாழ்ப்பாணம் இ. போ. ச. டிப்போ இளைப்பாறும் பண்டபத்தில் நடைபெறவிருந்த யாழ். பிரதேச பஸ் தொழிலாளர் சங்கங்களின் கூட்டு முன்னணியின் பொதுக்கூட்டம் கடைதி நேரத்தில நடைபெறவில்லை எனத் தெரிகின்றது.

இக்கூட்டம் நடத்துவதற்கு முதல் அனுமதிவழங்கப்பட்டிருந்ததாகவும் ஆனால் கடைசி நேரத்தில் தலைமைப் பீடத்திலுள்ளவர்கள் கூட்டத்தைத்தடை செய்துவிட்டார்களென்றும் யூனியன் பிரதிநிதிகள் தெரிவித்தனர் தொழிலாளர்கள் இதனால் ஆத்திரமடைந்திருக்கிறார்களென்றும் அவர்கள் தெரிவித்தனர். நேற்றிரவு 11 மணிக்கு பிரதிநிதிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவிருந்தது.

### ரூ. 6 லட்சம்......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டுள்ளது. சுமார் இருபது பொலிசாருடன் இப்படகு நேற்றிரவு பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் அனுப்பிவைத்தார்.

கைப்பற்றப்பட்ட லொறி ஒன்றும் வள்ளமும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. [கா. நி.]

### செயல்வைக் கூட்டம்

யாழ்ப்பணம், திங்கள்

ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்க செயலவைக் கூட்டம் இம் மாதம் 21-ம் தேதி பருத்தித்துறை நகர சபை ஜனசமூக நிலையத்தில் திரு. எஸ். தலம்சூரியா தலைமையில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "தகப்பனார் குடித்தபோது தாயார் விருந்தையில் நின்றார்"

## உருத்திரபுரம் கொலை வழக்கில் மகன் செல்வராசா சாட்சியம்

சாவகச்சேரி, ஞாயிறு

"கொலையுண்ட தகப்பனார் கள்ளுக்குச் சென்றுவிட்டு வரும்போது ஒரு போத்தல் கள்ளு கொண்டு வந்தார். அம்மா சாப்பாடு போட்டுத்தர நான் அவரிடம் கொடுத்தேன். அவர் கள்ளு குடித்த பின்னரே சாப்பிட்டார்."

உருத்திரபுரம் ஆசைப்பிள்ளை கொலைவழக்கு இன்று மீண்டும் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. வி. இராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சென்ற தவணை சாட்சியமளித்த எதிரியினதும் இறந்த ஆசைப்பிள்ளையினதும் மூத்த மகன் செல்வராசா [17வயது]வை எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. வி. செல்லத்தம்பி குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி செல்வராசா மேற்கண்டவாறு கூறினார்.

இவ் வழக்கில் பரந்தன் ரசாயனத் தொழிற்சாலைக் காவலாளியும், உருத்திரபுரம் வாசியுமான ஆசைப்பிள்ளையை 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் திகதி இரவு கொலை செய்ததாக அவரது மனைவி செல்லம்மா மீது கிளிநொச்சிப் பொலிஸாரால் குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

செல்லம்மா சார்பில் புரக்டர் வி. செல்லத்தம்பி ஆஜரானார். வழக்காளி தரப்பில் புரக்டர் சி. பாலகிருஸ்ணனின் அனுசரணையுடன் கிளிநொச்சிப் பொலிஸ்சார்ஜன்ட் திரு. தாமோதரம் வழக்கை நடாத்தினார்.

விசாரணையைப் பார்க்க நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

செல்லம்மா வெள்ளைச் சட்டையும் நீலப் புள்ளியிட்ட வெள்ளைசேலையும் அணிந்திருந்தார்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது:—

வழக்- உமது தகப்பன் குடிப்பவரா?

ஆம்.

வழக்- அயலவருடன் உமது தந்தை சண்டை பிடிப்பாரா? இல்லை.

வழக்- அயலவரிடம்கடன் வாங்கியது தெரியுமா? தெரியாது.

வழக்- உமது தகப்பன் சம்பவதினம் சாவகச்சேரியால் வந்தபோது இராசரத்தினம் அங்கு நின்றாரா? ஆம்.

வழக்- எவ்விடத்திலிருந்து சாப்பிட்டார்? விருந்தையில்

வழக்- யார்கொடுத்தது? நான்கொடுத்தேன். அம்மா போட்டுத்தந்தார்.

வழக்- சத்தம்கேட்டுவிருந்தைக்கு நீர்போனபோது கதவு இரண்டும் திறக்கப்பட்டிருந்ததா? ஒன்று திறக்கப்பட்டிருந்தது.

வழக்- விடியும்வரை விளக்கு எரிவதா? ஆம்.

வழக்- அன்று மழை பெய்ததா? ஆம்.

வழக்- காற்று அடித்ததா? ஆம்.

வழக்- தகப்பனார் முதல் கிடந்த இடத்திலேயே கிடந்தாரா? ஆம். துடித்துக்கொண்டிருந்தார்.

வழக்- தாயார் விருந்தையில் நின்றார்? ஆம். என்னைக் கண்டு ஓடினார்.

வழக்- தாயார் எந்தப்பக்கத்தில் நின்றார்? தகப்பனை நோக்கியபடி அருகே நின்றார்.

பொலிஸ் சார்ஜன் இ. சின்னத்தம்பியும் சாட்சியமளித்தார் மேல் விசாரணை இம்மாதம் 26-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

### செவ்வாய்க்கிழமை 19-3-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல் வகை, 8-00 இசை வேளை., 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கதம்பஇசை.

இரவு 6-15 குதூகலம், 6-45 பாவளம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 பேச்சு, 7-45 வாத்தியஇசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைச்சித்திரம், 10-00 நேயர்விருப்பம்.

## எதிரிகள் விடுதலை

காங்கேசன்துறை, செவ்.

சங்கானையைச் சேர்ந்த நாகலிங்கம் பெண் இலட்சுமியின் வீட்டுக்குத் தீ வைத்து 2000 ரூபாநஷ்டம் விளைவித்ததாக ஏ. இராமு எஸ். சின்னராசா, எப். இராசதுரை, எஸ். செல்வரெத்தினம் ஆகிய நால்வர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதவான் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சாட்சியங்கள் முரண்பாட்டினால் நீதவான் எதிரிகளை விடுதலை செய்தார். எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

## நெசவு நிலையம் வேண்டும்

உடுப்பிட்டி, திங்கள்

மத்தொனி சிறுபான்மைத் தமிழர்களுக்கென ஒரு நெசவு நிலையம் நிறுவவேண்டியது மிகவும் முக்கிய தேவையாகும். இங்கு நெசவுசாலையை நிறுவுவதன் மூலம் இளம்பெண்களுக்கும், படித்த வாலிபர்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைப்பதோடு கைத்தொழில் வளர்ச்சியில் பங்குகொள்ளவும் முடியும்."

இவ்வாறு கோரும் மகஜரொன்றைக் கரவெட்டி மேற்கு, மத்தொனி திருவள்ளுவர்சனசமூக நிலையத்தினர் உள்நாட்டு அமைச்சர் திரு. டபிள்யூ. தகநாயக்காவிற்கு அனுப்பி வைத்துள்ளனர். இம்மகஜரின் பிரதிகள் யாழ். மாவட்ட அரசாங்க

# பொது அறிவும் உள்ளூர் அறிவும்

### வினாக்கள்

1. யப்பானின் பிரதமமந்திரி யார்?
2. இலங்கை மேற்சபை[செனற்/மூதவை]யின் முதல்வர் [Leader of the Senate] யார்?
3. கானா[GHANA]வில் நம் நாட்டுத் தூதுவராகக் கடமை ஆற்றுபவர் யார்?
4. சர்வதேச நீதிமன்றம்[International Court of Justice] எங்கே அமைந்துள்ளது?
5. இலங்கையில் தற்போது எத்தனை அமைச்சுகள் உண்டு?
6. "கால் மில்டன்பேகர்"[Karl Mildenburgar]என்பவர் எத்துறையுடன் ஈடுபாடுகொண்டவர்?
7. இலங்கையின் தென்னை ஆராய்ச்சி நிலையம் [CRI] எங்குளது?
8. பாரிஸில்[Paris]எத்தனை முறை ஒலிம்பிக் விளையாட்டுகள் நடைபெற்றன?
9. இலங்கை உரக்கூட்டுத் தாபனத்]Fertilizer corporation] தலைவர் யார்?
10. ஐ. நா. வியாபாரத்திற்கும் அபிவிருத்திக்கும் அமைந்த முதலாவது மகாநாடு[UNCTADI] எங்கே நடைபெற்றது?
11. இலியட்[Illiad]என்ற காவியத்தை யாத்தவர் யார்?
12. கனவருல்முனை[Cape Canavaral]யின் தற்போதைய பெயர் யாது?
13. மேற்கு ஜேர்மனியின் தலைநகரம் யாது?
14. எந்நாட்டில் அமெரிக்க போர்விமானம் ஒன்று அண்மையில் [21-1-1968] ஜலவாயுக் குண்டுகளுடன் விழுந்து நொருங்கியது?
15. "எக்ஸ்போ' 67"[Expo' 67]எந்நாட்டில் நடைபெற்றது?

[விடைகள் 7-ம் பக்கம் பார்க்க]

இலங்கைக்கு

## உல்லாசப் பிரயாணிகள் தொகை அதிகரிக்கிறது

யாழ்ப்பாணம், செவ்.

கடந்த இரு வருடங்களிலும் இலங்கை வரும் உல்லாசப் பிரயாணிகளின் தொகை குறிப்பிட்ட அளவு அதிகரித்துள்ளதாக புள்ளிவிபரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

உல்லாசப் பிரயாணிகளின் வருகை கடந்த இருவருடம் மட்டும் சுமார் 24.8 சதவீதம் உயர்ந்துள்ளதாக தெரிகின்ளது. 1966.ம் ஆண்டில் 18,969 உல்லாசப் பிரயாணிகளும் 1667-ம் ஆண்டில் 23,672 உல்லாசப்பிரயாணிகளும்இலங்கை வந்துள்ளனர். ஆனால் 1962 ம்ஆண்டுதொடக்கம்1966ம் ஆண்டுவரை இங்கு வருடமொன்றிற்கு சராசரி 19,016 உல்லாசப் பிரயாணிகளே வந்திருந்தனர்.

இலங்கை உல்லாசப் பிரயாணிகள்சபை எடுத்திருக்கும் புதிய முயற்சிகள் நடைமுறைக்கு வரும் போது இன்னும் அதிகமான பிரயாணிகள் இங்கு வரலாமென எதிர்பரர்பகப்படுகிறது. (கா. நி)

## பொலிஸாருக்கு எதிராக வழக்கு

காங்கேசன்துறை, செவ்.

சுன்னாகம் ரவுண் கிளப்பைச்சேர்ந்த சின்னத்தம்பி வடிவேலு என்பவர் தனது வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் மூலம் தனிப்பட்ட வழக்கொன்றைச் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கும் எதிராகத் தாக்கல் செய்துள்ளார்.

இம்மாதம் 6ந்திகதி எம். எம். ஏ. வைவல் என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் தன்னை அடித்துக் காயப்படுத்தினாரென்றும், இன்ஸ்பெக்டர் ஜேக்கப் தன்னைக் 'கொல்லுவேன்' என்று பயமுறுத்தியதாகவும் குற்றஞ்சாட்டி மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு எம். சண்முகலிங்கம் முன்னிலையில் தாக்கல் செய்துள்ளனர்.

எதிரிகள் இருவருக்கும் சமன்ஸ் அனுப்பப்பட்டு அடுத்தமாதம் 4ந்திகதி கோர்ட்டில் ஆஜராகும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளார்.

## ரூ. 2 லட்சம் பெறுமதியான ஜவுளிகள் கைப்பற்றினர்

காங்கேசன்துறை, திங்கள்

இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான ஜவுளிகளை மயிலிட்டிக் கடற்கரையில் இராணுவத்தினர் கைப்பற்றினர்.

இன்றுகாலை 5-30மணியளவில் மயிலிட்டிக் கடற்கரையில் இந்தியாவிலிருந்துகடத்தப்பட்டதாகக் கருதப்படும் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான ஜவுளிவகைகள் கொண்ட ஒரு லொறியை பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் ரோந்து சுற்றி வருகையில் கைப்பற்றினர்.

கடலில் 7 மூடைகள் கொண்ட ஜவுளிகளை மயிலிட்டிக் கிராம சேவகர் கட்டுமரத்தில் சென்று பொலிசாரின் உத்தரவின் பேரில் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட சுமார் 40 ஜவுளி மூடைகளை காங்கேசன்துறை சுங்கத் தடுப்பு பகுதியினரிடம் இராணுவத்தினர் ஒப்படைத்தனர். மேல் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## குஷ்டரோகதடுப்பு அதிகாரி பார்வை இட்டார்

அனலைதீவ, திங்கள்

குஷ்டரோக தடுப்பு இலாகாவைச்சேர்ந்த வைத்திய சுப்பிறின்டன் டாக்டர் பொன்சேகா கடந்த ஒரு வாரகாலமாக தீவுக்பகுதிக்கு விஜயம் செய்து சம்பந்தப்பட்ட நோயாளர்களைப் பார்வையிட்டார்.

அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, காரைநகர் போன்ற இடங்களிலுள்ள குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்ட நோயாளர்களைப் பார்வையிட்ட இவர் ஊர்காவற்றுறை சுகாதார வைத்தியர் கந்தோரில் கூட்டம் ஒன்றை நடாத்தினார். கூட்டத்திற்கு தீவுப்பகுதி சுகாதார பரிசோதகர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவிற்கும், உடுப்பிட்டி எம். பியும் உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## 'கல்யாணம்செய்ய வேண்டுமென்றார்' இளைஞன் மரணத்தில் பெற்றோர் சாட்சியம்

புலோலி, திங்கள்.

தனக்குத் திருமணம் செய்துவைக்க பெற்றோர் மறுத்ததால் இளைஞர் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டாராம். இச்சம்பவம் பருத்தித்துறையில் நடைபெற்றது.

துன்னாலை வடக்கைச் சேர்ந்த செல்லையா என்ற இந்த இளைஞர் தமக்குக் கல்யாணம் செய்துவைக்கும்படி தமது பெற்றோரைக் கேட்டதாகவும், சகோதரிமாருக்குக்கல்யாணம்செய்துவைத்தபிறகே அப்படிச் செய்ய முடியுமென்று தந்தையார் சொல்லவே, மனமுடைந்த இளைஞர் நஞ்சருந்தி இறந்ததாகவும் மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறைப் பொலிஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள் எச். டி. பெரேனிஸ் சாட்சியமளிக்கையில், இறந்தவரின் உடலில் எவ்வித காயமுமிருக்கவில்லையென்றார். சிகிச்சையளித்த மந்திகை ஆஸ்பத்திரி டாக்டர் சாட்சியமளிக்காததால் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் தமது தீர்ப்பை ஒத்திவைத்தார்.

## வரவேற்பு அளிப்பார்

வல்வெட்டித்துறை, திங்கள்

உடுப்பிட்டி எம்.பி. திரு மு. சிவசிதம்பரம் உபசபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டதைக் கௌரவிக்கும் முகமாக தொண்டமனாறு சின்னக் கடற்கரை மைதானத்தில் வரவேற்பு உபசாரமொன்றை நடத்துவதென தொண்டமனாறு மறுமலர்ச்சி மன்றப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்துக்கு மன்றத்தலைவர் திரு க. சிவதாஸ் தலைமை வகித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவும் உள்ளூர் அறிவும்

விடைகள்

1. திரு. இசேக்கோ செற்றோ [Mr. Eisako Sato]
2. செனற்றர் ஃபேர்லி விஜயமனே [Sen. Fairlie Wijemanne]
3. திரு. எஸ். எல். றத்வத்த [Mr. S. L. Ratwatta]
4. த ஹேக் [The Hague].
5. 19 [பத்தொன்பது].
6. அதிபாரக் குத்துச்சண்டை.
7. லுனுவில [Lunuwila].
8. 2 [இரண்டு].
9. திரு. மஹிந்தா சில்வா [Mr. Mahinda Silva]
10. ஜெனிவா [Geneva].
11. ஹோமர் [Homer].
12. கெனடி முனை [Cape Kennedy]
13. பொன் [Bonn].
14. கிறீன்லாந்து [Greenland]
15. கனடா [Canada].

(அடுத்த மாதிரி வினாவிடைகள் 26-3-68 இல் வெளிவரும்)

## கந்தசாமி அரங்கில் நாடகவிழா

குரும்பசிட்டி, செவ்வாய்

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலைய ஆதரவில் இன்று மாலை 6-30 மணிக்கு மகாதேவா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற விருக்கும் நாடக விழாவை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார். நாவலர் ஞாபகார்த்த தங்கப் பதக்கத்திற்கு போட்டியாக நடக்கும் இவ்விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் "அ. ந. கந்தசாமி" அரங்கில் நடைபெறுகின்றன.

முதல் தினமான இன்று மேடையேற்றப்படும் நாடகங்களும் கலந்து கொள்ளும் கழகங்களின் பெயர் விபரங்கள் வருமாறு:-

"வாழ்க்கைச் சக்கரம்" - கன்னாகம் இளந்தென்றல் மன்றம். "சாம்ராட் அசோகன்" - இளவாலை கயித்தாரி சனசமூக நிலையம். "யார் குற்றம்" - சுதுமலை கலைச் செல்வம் கலைமன்றம்.."இலங்கேஸ்வரன்" - வட்டுக்கோட்டை கலைவாணி நாடக மன்றம். "இருள் அகன்றது" பண்டத்தரிப்பு கதிரொளி நாடக மன்றம்.

## நெல் உற்பத்தி போட்டி
# வெற்றி பெறுபவர்களுக்கென ரூ. 40,000 ஒதுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்வாய்

மாவட்ட ரீதியாக விவசாய இலாகா நடத்த ஏற்பாடு செய்துள்ள நெல் உற்பத்திப் போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்குப் பரிசில்களை வழங்கவென 40,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை இலங்கைப் பசளைக் கூட்டுத்தாபனம் வழங்க முன்வந்துள்ளது.

21 மாவட்டங்களிலும் நடாத்தப்படும் இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறும் விவசாயிகளுக்குப் பணப்பரிசில்கள், மருந்து தெளிக்கும் கருவி, சைக்கிள், ரேடியோ ஆகியவற்றுடன் தங்கப்பதக்கங்களும் பரிசிலாக வழங்கப்படும்.

நெல் உற்பத்திப் போட்டியில் மாவட்ட ரீதியாக விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும். முன்னர் இப்போட்டி காரியாதிகாரி பிரிவுகளிலேயே நடாத்தப்பட்டு வந்தது. தற்போது பெரும்போகத்துக்கான போட்டி நடைபெற்று வருகின்றது. கடந்த வருடம் காரியாதிகாரி பிரிவுகளில் நடைபெற்ற போட்டியில் பல பகுதிகளிலிருந்தும் சுமார் 25,000 விவசாயிகள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் ஏக்கர் ஒன்றிற்கு 275 புசல் நெல்லை உற்பத்தி செய்து கூடிய விளைச்சலைப் பெற்ற பலாங்கொடையைச் சேர்ந்த எம். சுகததாசா முதற் பரிசைப் பெற்றது குறிப்பிடத் தக்கதாகும். (கா.நி.)

## புதிய நிர்வாகிகள்

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவில் ஒரு பிரதான கூட்டுறவுச் சங்கமாக விளங்கும் நெடுந்தீவு பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேஷ பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்;

தலைவர்: எஸ். ஆர். பசுபதி, செயலாளர்: வ. குமாரசாமி, தனாதிகாரி: க. கணபதிப்பிள்ளை, நிர்வாகசபை அங்கத்தவர்களாக 15 பேர் தெரிவு செய்யப்பட்டனர். கூட்டம் யாழ். மேற்கு கூட்டுறவுப்பகுதி பிரதம பரிசோதகர் தலைமையில் நடந்தது. பழைய தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியதைத் தொடர்ந்தே புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது

## சுடப்பட்டார்

புத்தளம், திங்கள்

ஆனைமடு பகுதியிலுள்ள குருகுல் கட்வ என்னுமிடத்தைச் சேர்ந்த புஞ்சிபண்டா என்பவருக்கும், மனுவேல் சிங்கோ, ஜோன் ஆகியோருக்குமிடையே ஏற்பட்ட காணிச் சச்சரவைத் தொடர்ந்து நடந்த துப்பாக்கிச் சூட்டிற்கு மனுவேல் சிங்கோ பலியானார். ஜோன் என்பவர் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். சந்தேக நபரான புஞ்சி பண்டா, தலைமறைவாக இருந்து வருகிறார்.

## வாலிபர் குடியேற்றத் திட்டங்கள்

யாழ்ப்பாணம். செவ்.

கனகாம்பிகைக் குளத்தில் படித்தவாலிபர் குடியேற்றத்திட்டம் ஒன்று விரைவில் அமைக்கப்பட விருக்கின்றது. இத்திட்டத்தின் முதல் அங்கத்தில் 80 வாலிபர்கள் குடியேற்றப்படுவார்கள்.

ஒவ்வொரு வாலிபருக்கும் 2 1/4 ஏக்கர் வீதம் உப உணவு உற்பத்திக்காக வழங்கப்படும். இத்திட்டம் அடுத்த ஆனிமாதத்தில் ஆரம்பமாகலாம் எனத் தெரிகிறது.

விஸ்வமடுக்குளம் குடியேற்றத்திட்டத்தில் 3-வது பிரிவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 50 விவசாயிகளும் அடுத்தமாத முற்பகுதியில் குடியேற்றப் படுவார்கள். அம்பலப்பெருமாள் திட்டம் அடுத்த மாதத்தில் ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள முதிரையன் கட்டு குடியேற்றத்திட்டத்துக்கென இங்கிருந்து 500 பேர் குடியேற்றப்பட்டிருக்கின்றனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் பெரிய கிரிக்கெட் போட்டி

# யாழ். சென்றல் - சென். ஜோன்ஸ் நாளை மோதுகின்றன

## ரசிகர்கள் நெருக்கத்தை சமாளிக்க பலத்த ஏற்பாடு

— நமது விளையாட்டு நிருபர் எம். எஸ். துரைராஜா —

யாழ்ப்பாணம், செவ்வாய்

வடமாகாணத்தில் கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பெரிய மோதலாகக் கணிக்கப்படும் சென்றல் — சென். ஜோன்ஸ் கிரிக்கெட் போட்டியில் இம்முறை ரசிகர்கள் முற்றுகையும், ஆதரவும் இருபககமும் கூடுதலாக இருக்குமென எதிர்பார்க்கப்படுவதால் முறைப்படி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருந்த இப்போட்டி கல்லூரிகளின் அதிபர்கள் ஆலோசனைப்படி இம்முறையும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலேயே நடைபெறவிருக்கிறது.

நாளையும் மறுதினமும் தொடர்ந்து இரு நாட்கள் நடைபெறவிருக்கும் இப்போட்டி ஒவ்வொரு நாளும் காலை 10-30 மணிக்கே ஆரம்பமாகுமெனத் தெரிகிறது.

ரசிகர்கள் நெருக்கம் அதிகமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுவதால் சுமார் 50 பொலிசார் அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படாத வகையில் பாதுகாப்பளிக்கவிருக்கின்றனர்.

### 70-வது வருடாந்தப் போட்டி

70-வது வருடாந்த போட்டியான சென்றல் சென். ஜோன்ஸ் போட்டியில் வெடி கொளுத்துவதைப் பொலிசார் தடை செய்துள்ளனர்.

இப் போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கு உற்சாகமளிப்பதில் இரு கல்லூரிகளின் பழைய மாணவர்கள் வெவ்வேறு இடங்களில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சேருகின்றனர். இரு கல்லூரிகளின் "கொடிகளும்" கார்களிலும் சைக்கிள்களிலும் பறக்க ஆரம்பித்துள்ளன.

### சென். ஜோன்ஸ் கோஷ்டி

**எஸ். எம். மூத்ததம்பி** [காப்டன்]

கிரிக்கெட் உலகில் 5 வருடம் அனுபவம் பெற்றவரும் துடுப்படி வீரனும் ஆகிய எஸ். எம். மூத்ததம்பி இம்முறை சென். ஜோன்ஸ் காப்டனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சந்தர்ப்பத்துக்கு தமதுகோஷ்டியைசெட் பண்ணி எதிர்க் கோஷ்டியைத் திணறடிப்பதில் வல்லவரான இவர் ஒரு 'ஆல்றவுண்டர்' ஆகும் கிரிக்கெட் காப்டனாக ஆடுவதில் இவர் ஒரு திறமைசாலி.

**ரி. விபுலானந்தா**

இவர் ஒரு நம்பிக்கையான துடுப்படி வீரர். கிரிக்கெட் உலகில் 5 வருட அனுபவமுள்ளவரான விபுலாநந்தன் இக் கோஷ்டியின் முன்னணியில் நிற்கும் துடுப்படி வீரர்களில் முன்னணியில் நிற்பராகும். வலது கைய் மெதுவான பந்தெறி வீரராகும். இவர் வேகமாக வரும் பந்தை தடுத்து நிறுத்துவதில் தீரர்.

**எம். சுரேந்திரா**

4 வருடம் கிரிக்கெட் அனுபவம் பெற்ற இவர் ஒரு சிறந்த வலது கைத் துடுப்படி வீரராகும். மெதுவாக ஓடி பந்தை வீசுவதில் வல்லவரான இவர் ஒரு 'ஆல்றவுண்டர்'

**ரி. எஸ். குலநாதன்**

கிரிக்கெட் உலகில் 2 வருடம் அனுபவம் பெற்ற இவர் ஒரு சிறந்த அதி வேகப் பந்து வீச்சு வீரராகும். ஆரம்ப பந்து வீச்சு வீரர்களில் ஒருவரான இவர் துடுப்பெடுத்தாடுவதிலும் சளைத்தவரல்ல.

**என். வாமதேவன்**

இவரும் கிரிக்கெட் உலகில் 2 வருடம் அனுபவம் பெற்றவர். இவர் ஒரு ஆரம்ப பந்து வீச்சு வீரராகும். சென். ஜோன்சின் பல வெற்றிகளுக்கு காரணமான இவர் ஒரு நம்பிக்கையான துடுப்படி வீரரும் ஆகும்.

**ஜே. நவரட்ணம்**

இவர் 2 வருட கிரிக்கெட் அனுபவம் பெறவர். துடுப்படி ஆட்டம், வேகமாக ஓடிப் பந்து தடைசெய்தல் ஆகியவற்றில் வல்லவரான இவரும் ஒரு ஆல்றவுண்டராகும்.

**கே. எஸ் மகாலிங்கம்**

கிரிக்கெட் உலகில் 2 வருடம் அனுபவம் பெற்ற இவர் ஒரு நம்பிக்கையான துடுப்படி வீரர். இவரும் வேகமாகப் பந்து தடுப்பதில் வல்லவராகும்.

மற்றும் டி. எஸ். மில்ஸர், என் சிவபாலன், கூ.லி, எம் தெய்வேந்திரா ஆகியோர் கிரிக்கெட் உலகுக்குப் புதிவர்களாயினும் கிரிக்கெட் ஆட்டத்தில் இளம் புலிகளாகும். இவர்களின் ஆட்டத்தைக் கவனித்தவர்கள் இவர்கள் கிரிக்கெட்டிலே நட்சத்திரங்களாக ஜொலிப்பர்என்றே என்னுவர்.

ஃ ஃ ஃ

### சென்றல் கோஷ்டி

யாழ். மத்திய கல்லூரி இவ்வருடத்துக்கான கிரிக்கெட் போட்டியில் ஒன்றிலும் வெற்றியீட்டவில்லையெனினும் பல வெற்றிகளை நேரம் போதாத காரணத்தால் பெறமுடியாமல் போனதுகுறிப்பிடத்தக்கது. யூனியன் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, ஹாட்லிக்கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி ஆகிய கல்லூரிகளை வெற்றி தோல்வியின்றி முடிந்தது. எனினும் கண்டி சில்வஸ்ரர், குருநாகல் மாலியதேவா ஆகிய கல்லூரிகளுடன் தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

**பி. பாலேந்திரா** (காப்டன்)

3 வருடம் கிரிக்கெட் அனுபவம் பெற்றவரும் சிறந்த நம்பிக்கையான துடுப்படி வீரனுமாகிய பி. பாலேந்திரா இக்கோஷ்டியின் காப்டனாகும். வலது கைத் துடுப்படி வீரனான இவர் [illegible] பாகவே காணப்படும். வேகமாக ஓடிப்பந்து தடுப்பதிலும் வல்லவரான இவர் ஒரு ஆல்றவுண்டர்.

**டி. புரட்சிதாசன்**

இவர் கிரிக்கெட் உலகில் 2 வருடம் அனுபவம் பெற்றவர். அதிரடிகளுடன் கூடிய விறுவிறுப்பான துடுப்படியாட்டத்தை மேற்கொள்ளும் இவர் இக்கோஷ்டியின் உதவிக்காப்டனுவார் குருநாகல் மாலியதேவாகல்லூரியுடனான போட்டியில் இவர் தனது விக்கெட்டை இழக்காமல் 95 ஓட்டங்களைப்பெற்றவராகும். இவர் ஒரு சிறந்த பந்து தடுப்பு வீரர்.

**ஜீ. எஸ். சாந்திகரன்**

2 வருட கிரிக்கெட் அனுபவமுள்ள இவர் ஒரு ஆல்றவுண்டராகும். வலதுகைத் துடுப்படி வீரரான இவர் யூனியன் கல்லூரியுடனான போட்டியில் 52 ஓட்டங்களைப்பெற்றவராகும். இவரும் ஒரு நம்பிக்கையான துடுப்படி வீரராகும். இவர் ஒரு 'ஸ்பின்னர்' பந்தெறி வீரராகும். வேகமாகஓடிப் பந்து தடுப்பதில் இவர் ஒரு புலி.

**சி. கே. நரேந்திரன்**

2 வருட கிரிக்கெட்அனுபவமுள்ள இவர் இக்கோஷ்டியின் ஆரம்பத்துடுப்படி வீரராகும். இவரும் வேகமாக ஓடித்தடுப்பதில் மிகவும் கைதேர்ந்தவர்.

**எஸ். பரமசிவம்**

கிரிக்கெட் உலகில் இரு வருட கிரிக்கெட் அனுபவமுள்ள இவர் இக் கோஷ்டியின் ஆரம்ப பந்து வீச்சுவீரராகும். வலதுகைத் துடுப்படி வீரரான இவர் யாழ். இந்துக் கல்லூரியுடனான போட்டியில் 76 ஓட்டங்களைப் பெற்றவர்.

**எஸ். சிவக்குமார்**

இவரும் கிரிக்கெட் உலகில் 3 வருட அனுபவம் பெற்றவராகும். இவர் மொத்தத்தில் சகலதும் வல்ல ஒரு ஆல்றவுண்டர்.

**எம். தில்லையம்பலம்**

இவர் கிரிக்கெட் உலகுக்குப் புதிய ஒரு ஆட்டக்காரராகும். வலது கைபந்து வீச்சு வீரரான இவர் இடது பக்கம் துடுப்பெடுத்தாடுவதில் கை தேர்ந்தவர். யாழ். இந்துக் கல்லூரியுடனான போட்டியில் 74 ஓட்டங்களைப் பெற்றவராகும்.

**எம். சிவானந்தன்**

2 வருட கிரிக்கெட் அனுபவம் பெற்ற இவர் இக்கோஷ்டியின் ஆரம்பபந்து வீச்சு வீராகும். வேகமாகப் பந்து வீசுவதில் திறமைசாலியான ஒரு அருமையான வலதுகைத் துடுப்படி வீரராகும். சிறந்த பந்து தடுப்பு வீரரான இவர் மொத்தத்தில் ஒரு ஆல்றவுண்டர்.

**கே. ஜெயரெட்ணகுமார்**

கிரிக்கெட் உலகுக்குப் புதியவரான இவர் இக் கோஷ்டியின் ஆரம்பத்துடுப்படி வீரராகும். சிறந்த பந்து தடுப்பு வீரரான இவரும் ஆல்றவுண்டர்.

---

## புள்ளி விபரம்

நாளை நடைபெறும் சென்றல் — சென் ஜோன்ஸ் கிரிக்கெட் போட்டியில் ரசிகர்களுக்கு உதவுமுகமாக புள்ளிவிபரங்கள் குறித்துக்கொள்ளக் கூடிய குறிப்புபத்திரம் வெளியாகும் என்பதை ரசிகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

## ஆர். ஜி. யை விலக்க வற்புறுத்தல்

கொழும்பு, திங்கள்

கூட்டரசாங்க கட்சியிலிருந்து தம்பதேனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்காவை விலக்குமாறு சமசமாஜக்கட்சி அங்கத்தவர்களும் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்களும் வற்புறுத்தியுள்ளதாகத் தெரிகிறது. இவரைக் கட்சியிலிருந்து விலக்காவிடில் தாம் பகிரங்கமாக அவரைப் பொதுக்கூட்டங்களில் தாக்கப்போவதாக இவர்கள் தெரிவித்துள்ளனராம்.

## கச்சதீவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி) நள்ளிரவுமுதல் 'ஊசி குத்தும்' கைதாரப்பகுதி ஊழியர்கள் இங்கு சென்று தமது கடமையை ஆரம்பிப்பார்கள்.

ஆகாயத்தில் தாழப் பறந்து ரோந்து சுற்றவென ஆகாயப்படையைச் சேர்ந்த இருவிமானங்கள் இன்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகின்றது. (கா. நி.)

## பீகார் மந்திரிசபை வீழ்ச்சி

புதுடில்லி, மார்ச் 18

பீகாரில் இன்று ராஜ்ய சட்டசபையில் எதிர்க்கட்சியினர் தாக்கல்செய்த நம்பிக்கையில்லா பிரேரணை 165 வாக்குகள் சாதகமாகவும் 148 எதிராகவும் பெற்று நிறைவேறியது. அதைத்தொடர்ந்து மந்திரி சபையின் ராஜினுமாவை முதல்மந்திரி திரு. பி. ஜி. மண்டல் கவர்னரிடம் சமர்பித்தார்.

## மரண அறிவித்தல்

காணிக்கத்தோமில் விதானையாயிருந்து இளைப்பாறியவரும் வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவருமாகிய ந. கந்தசாமி [அப்புத்துரை] காலமாகிவிட்டார். இவர் மீனுச்சியின் அன்புக் கணவரும், மயில்வாகனத்தின் [அப்பாமணி] மைத்துனரும் வள்ளியம்மையின் சகோதரரும், பாலசுப்பிரமணியத்தின் சிறிய தகப்பனும், சிவகாமி அம்மாளின் மாமனுருமாவார். அன்னரது பூதவுடல் இன்று (19-3-68) பகல் 12 மணியளவில் நல்லூர் செட்டித்தெரு லேன், 7-ம் இலக்க இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். Advt

## அறிவித்தல்

சுழிபுரம் பத்திரகாளி கோயிலில் பலியிடுதல்பற்றி நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த அறிவித்தல் பிழையானது. பலியிடுதல்பற்றி தர்மகர்த்தாக்கள் கூடி இன்னும் ஒரு முடிவும் செய்யவில்லை.

சி. ஆசைப்பிள்ளை
176 ஆலயகர்த்தா.

## விபத்தில் 13 பேர் காயம்

சிலாபம், திங்கள்

பங்கதெனியாவில் நடந்த பஸ்—லொறி விபத்தில் பஸ் சாரதி உட்பட 13 பேர் படுகாயமடைந்தனர் லொறியில் சென்ற ஒருவரும் காயமடைந்தார். பஸ் சாரதியின் நிலைமை அபாயகரமாக இருப்பதாக அறிவிக்கப் பட்டது. காயமடைந்தோர் சிலாபம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## திருமண அழைப்பு

### சுந்தரலிங்கம் — நிர்மலாதேவி

அன்புடையீர்,

நிகழும் பிலவங்க வருஷம் பங்குனிமாதம் 7-ம்நாள் (20—3—68) புதன்கிழமை காலை8 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது புத்திரன் திருநிறை செல்வன் சுந்தரலிங்கம் அவர்களுக்கும் | எமது புத்திரி திருநிறைசெல்வி நிர்மலாதேவிக்கும் |

திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் பங்குகொண்டு சிறப்பித்து ஏகுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்,

| | |
|---|---|
| தா. கிருஷ்ணசாமிப்பத்தரும் பாரியாரும் (மணமகன் பெற்றோர்) காரைக்காட்டுலேன், வண்ணார்பண்ணை. | சி. கனகரத்தினம் பத்தர் (மணமகள் தந்தை) நல்லூர் |

Advt.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம்19-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org